


36ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 36 பாலம்: 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2026

# புதிய கனடிய சீனக் கூட்டுறவு

கனடியப் பிரதமர் மார்க் காணியின் இவ்வாண்டு ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெற்ற சீனப்பயணம் கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணங்களில் ஒன்றாக இருந்தது. இது சீனாவுடனான கனடாவின் உறவை மறுவடிவமைத்தது மட்டுமல்லாமல், கனடிய மத்திய அரசு எவ்வாறு போட்டி நிறைந்த, நிச்சயமற்ற நிலையில் உள்ள உலகத்தை வழிநடத்த விரும்புகிறது என்பதற்கான ஒரு புதிய அணுகுமுறையையும் அடையாளம் காட்டியுள்ளது.

கனடியப் பிரதமரின் சீனாவிற்கான இந்தப் பயணம் இரண்டு தரப்பிலும் மூன்று உறுதியான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளதாக கனடாவின் ஆசிய பசிபிக் அறக்கட்டளையின் ஆராய்ச்சி மற்றும் மூலோபாயத்துறைக்குத் துணைத்தலைவராக இருக்கும் வினா நட்ஜிபுல்லா (Vina Nadjbulla) தெரிவித்துள்ளார். முதலாவதாக இரண்டு நாடுகளுக்கும் இடையே ஒரு புதிய மூலோபாய (Strategic) கூட்டுறவு கட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளது. இரண்டாவதாக இரண்டு நாடுகளுக்கும் இடையே பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பிற்கான ஒரு வழிமுறையை ஏற்படுத்தியுள்ளது. மூன்றாவதாக அரசியல்ரீதியாக இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினையாக இருந்த இரண்டு முக்கிய வர்த்தகங்களுக்கு முன்னேற்றகரமான ஒரு தீர்வு தற்காலிகமாகக் காணப்பட்டுள்ளது என வினா நட்ஜிபுல்லா தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

கனடா தனது வர்த்தகத்தில் மிகப்பெரிய வாடிக்கையாளராக இருக்கும் அமெரிக்கா உடனான வர்த்தகத்தின் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை நிலவி வருவதால் தனது பொருளாதாரத்தைப் பாதுகாக்கத் தற்போது சீனாவுடனான விரிசல் அடைந்த உறவை சரிசெய்ய முயல்கிறது எனக் கூறும் CBC ஊடகம், இது எளிதான காரியமாக இருக்க மாட்டாது எனவும் தெரிவித்துள்ளது. அது மேலும் தெரிவிக்கையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உடனான உறவுக்குச் சேதம் விளைவிக்காமல், கனடாவின் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்காமல் மற்றும் மனித உரிமைகள் மீதான கனடாவின் உறுதி மொழிகளில் சமரசம் செய்யாமல், கனடாவின் வர்த்தகத்தைப் பன்முகப்படுத்தும் இலக்கை அடைவது எளிதான காரியமாக இருக்காது என்று கருத்து வெளியிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டிற்குப் பின்னர் கனடியப் பிரதமர் ஒருவர் சீனாவிற்கு மேற்கொண்ட முதல் பயணமாக இது அமைந்துள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின்போது கனடியப் பிரதமர் மிகவும் துணிவுடன் அடுத்த பத்து ஆண்டுகளில் கனடாவின் அமெரிக்க அல்லாத ஏற்றுமதிகளை இரட்டிப்பாக்கி உள்ளதாக கனடிய மூத்த அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.


Canadian Prime Minister Mark Carney and Chinese leader Xi Jinping
Thanks: BBC

கனடியப் பிரதமர் சீனாவிற்கான பயணத்தைத் தொடர்ந்து கத்தாரின் (Qatar) முக்கிய நிதி மையமாகவும், தலைநகராகவும் இருக்கும் டோஹாவிற்கும் (Doha) தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார். இந்நகரம் பாரசீக வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ள நகரமாகும். கனடாவிற்கும், கத்தாரிற்கும் இடையேயான வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கே கனடியப் பிரதமர் இங்கு பயணம் மேற்கொண்டிருந்தார். இந்நாட்டிற்குப் பயணம் செய்த முதலாவது கனடியப் பிரதமர் மார்க் காணி ஆவார்.

2024 மே மாதத்தில் அமெரிக்க அதிபராக இருந்த ஜோ பைடன் சீன மின்சார வாகனங்களின் இறக்குமதி மீதான சுங்கவரியை நான்கு மடங்காக உயர்த்தி 100% ஆக்கியிருந்தார். அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் நட்பு நாடான ஐரோப்பிய ஒன்றியமும் சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களுக்கு 36.3% சுங்கவரி விதிப்பதாக அறிவித்திருந்தது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் வழியைப் பின்பற்றி அப்போது கனடியப் பிரதமராக இருந்த ஜஸ்ரின் ரூடோவும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக கனடாவின் இரண்டாவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக இருந்த சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களுக்கு 100% சுங்கவரியை விதித்தார். அத்துடன் சீனாவில் தயாரிக்கப்படும் உருக்கு (Steel) மற்றும் அலுமினியத்திற்கும் (Aluminium) 25% சுங்கவரியையும் இறக்குமதியின்போது விதித்திருந்தார். சீன மின்சார வாகனங்கள் இறக்குமதி மீதான கனடாவின் 100% சுங்கவரி 2024 ஒக்ரோபர் 1ஆம் திகதியில் இருந்தும் சீனாவில் தயாரிக்கப்படும் உருக்கு மற்றும் அலுமினியத்தின் இறக்குமதி மீதான கனடாவின் 25% சுங்கவரி 2024 ஒக்ரோபர் 15ஆம் திகதியில் இருந்தும் அமல்படுத்தப்பட்டன.

சீனத் தயாரிப்புகளின் இறக்குமதியின் மீது சுங்கவரிகளை விதிக்கும்போது அப்போது கனடியப் பிரதமராக இருந்த ஜஸ்ரின் ரூடோ, “நாளைய வாகனங்களை உருவாக்குவதில் கனடாவின் வாகனத் துறையை உலகளாவிய தலைவராக நாங்கள் மாற்றுகிறோம். ஆனால், சீனா போன்ற நடிகர்கள் தமது மின்சார வாகனத் தொழிலிற்கு மானியம் வழங்கி அதன் வாகனத் தயாரிப்பாளர்களுக்கு நியாயமற்ற நன்மையை உலகளாவிய சந்தையில் வழங்குகின்றனர்” என்று கூறியிருந்தார்.

2026 ஜனவரி 13ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதிவரை கனடியப்பிரதமர் மார்க் காணியும் அவரது அமைச்சர்கள் உட்பட்ட பல வர்த்தகப் பிரமுகர்கள் மேற்கொண்ட சீனப் பயணத்தின்போது அவர்கள் பல சீன அரசியல் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்தனர்.

கனடியப் பிரதமர் மார்க் காணி பெய்ஜிங்கில் (Beijing) சீன அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping), சீனப் பிரதமர் லி கியாங் (Li Qiang) மற்றும் சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிர்வாகக் குழுவின் தலைவர் ஜாவோ லெஜி (Zhao Leji) ஆகியோரைச் சந்தித்தார். அவர்களின் சந்திப்பின் பின்னர் மார்க் காணியும் ஜி ஜின்பிங்உம் புதிய கனடிய சீனக் கூட்டுறவு ஒப்பந்தத்தை வெளிக்காட்டும் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டனர்.

இவ் அறிக்கையில், இப்புதிய கனடிய சீனக் கூட்டுறவு ஒப்பந்தமானது எரிசக்தி (Energy), சுத்தமான தொழில்நுட்பம் (Clean Technology) மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தம் ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவும், சீனாவும் எரிசக்தி வல்லரசுகளாகும் (Energy Super Powers). இரு நாடுகளும் இருவழி எரிசக்தி ஒத்துழைப்பை விரிவுப்படுத்துவதில் கவனம் செலுத்தும். இரு நாடுகளும் வாயுக்களின் உமிழ்வைக் குறைத்தல், மின்கலங்கள், சூரிய சக்தி, காற்று சக்தி ஆகியவற்றில் முதலிடுதல் மற்றும் எரிசக்தி சேமிப்பை அதிகரித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தும்.

அதைத் தொடர்ந்து மார்க் காணியும் அவரது குழுவினரும் கனடாவில் சீன முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு விரைவுப்படுத்துவதற்காக எரிசக்தி மற்றும் தூய்மையான தொழில்நுட்பத்தில் ஈடுபடும் வணிகத் தலைவர்களைச் சந்தித்தனர்.

கனடிய சீனக் கூட்டுறவு ஒப்பந்தத்திற்கு அமையவும், கனடிய உள்நாட்டு உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் கனடா 49,000 சீன மின்சார வாகனங்களின் இறக்குமதியை வருடந்தோறும் அனுமதிக்கும். இதற்கு இரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 6.1%

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# Canada House by CONCORD

## Toronto

Special Deal



- Heart of the Downtown Toronto
- 2 Spectacular Buildings with shared Amenities
- Special 2 year mortgage only 0.1%
- Very Flexible deposit structure
- Price starting as low as $500,000
- Parking & Locker available for Purchase
- Maintenance Fee 0.77$ per Sq.Ft.

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

# ATTENTION REALTORS & HOME BUYERS



**Available Till Midnight Including Weekends & Holidays**

**ANTON DHARMASEELAN**
MORTGAGE BROKER
#2 Mortgage Alliance Agent in All of Canada & #1 in GTA

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| Purchase | Major Banks |
| Refinance | Alternative Lenders |
| Self Employed | B Lenders |
| Bad Credit | Credit Unions |
| Investment Property | Trust Companies |
| Renewal | Private Lenders |

# 416 704 1200

anton@myhomemls.ca
Corporate:: #1410-5140 Yonge Street

Broker #10530
MORTGAGE ALLIANCE

# துறவறத்திற்குத் தயாராகிறாரா கோட்டாபய?

**– அரவின் –**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது, பௌத்த சித்தாந்த நூல்களைப் படிப்பதிலும் தியானம் செய்வதிலும் நேரத்தை செலவிடுவதாகவும், தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் துறவறம் பூண வாய்ப்புள்ளதாகவும், சிங்கள ஊடகம் ஒன்று அண்மையில் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ துறவு வாழ்க்கைக்கு தயாராகிறார் என்ற தகவல் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால், அவருக்கென ஒரு கொடூர முகம் இருந்தமை அனைவருக்கும் தெரியும்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குப் பின்னர், அமெரிக்காவில் இருந்து திரும்பி பாதுகாப்புச் செயலாளராக பொறுப்பேற்று இருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ. அந்தக் காலகட்டத்தில்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில், தமிழ் மக்கள் மீது மிகப்பெரிய இனஅழிப்பு நிகழ்த்தப்பட்டது.

மூன்று தசாப்தகால போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் அவர் வெற்றி பெற்றிருந்தார். அதற்காக அவர் எந்த எல்லைக்குச் செல்வதற்கும் எவ்வளவு பேரைக் கொன்று போடுவதற்கும், தயாராக இருந்தார். அதுபற்றி கவலையே படாமல், தன் திட்டத்தை முன்கொண்டு சென்றவர் அவர்.

இறுதிப்போரில் நிகழ்ந்த போர்க் குற்றங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய முக்கியமான சூத்திரதாரிகளில் அவரும் ஒருவர். அப்போரில் இடம்பெற்ற மீறல்களுக்கு, இன்று வரை நீதியோ நியாயமோ கிடைக்கவில்லை.

விளம்பரம்
VLAMBARAM
36ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

போரில் மீறல்கள் இடம்பெற்றதைக்கூட, கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது அவரது சகோதரர்களோ ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கவில்லை.

தமிழின அழிப்பைத் தீவிரமாக முன்னெடுத்து தமிழரின் கோபத்துக்கு ஆளாகிய அவர், கடந்த காலங்களில் தனது தவறுகளுக்காக வருந்தவும் இல்லை. வருத்தம் தெரிவிக்கவும் இல்லை.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று, அதிகாரத்தைக் கைப்பற்றிய கோட்டாபய ராஜபக்ஷவினால், ஓர் அரசியல் தலைவராக நிலைபெறவும் முடியவில்லை.



அவரது தீர்மானங்களின் விளைவுகளும், இயற்கையின் நியதியும் பாதியிலேயே அவர் ஆட்சியைப் பறிகொடுத்து ஓடும் நிலைக்குத் தள்ளின.

நாட்டை விட்டு ஒளிந்து ஓடியவர், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதும், திரும்பி வந்து வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். இறுதிக்காலத்தை அமெரிக்காவில் கழிக்கின்ற எண்ணத்தைக்கூட அவரால் நிறைவேற்ற முடியவில்லை. அவர் மீதான போர்க்குற்றச்சாட்டுகளே அதற்குக் காரணம். இதனால் கடைசிவரை இலங்கை மண்ணிலேயே இருந்து விட்டுப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட அவர், அதிகம் வெளியே வராமல், யார் கண்ணிலும் படாமல் இருந்து வருகிறார்.

யாருடனும் தொடர்பு கொள்வதில்லை, யாருடனும் பேசுவதில்லை, கிடைக்கும் நேரம் முழுவதும் பௌத்த சித்தாந்த நூல்களும் தியானமும் மட்டுமே அவருக்கு இப்போது துணையாக மாறியிருக்கின்றன. இது அவரது கடந்த கால தவறுகளின் விளைவு.

அசோக மன்னன் கலிங்கத்துப் போரின் முடிவில், துறவறம் பூண்டதாக வரலாறு சொல்கிறது.

கௌதம புத்தர் அரச வாழ்வின் இன்பங்களைக் கண்ட பின்னர் துறவறம் பூண்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ கொடூரமான குற்றங்களை இழைத்த பின்னர், தனது சொந்த மக்களாலேயே விரட்டி அடிக்கப்பட்ட பின்னர், துறவறம் பூணும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். அவர் உண்மையிலேயே துறவறம் பூணும் நிலையில் இருக்கிறாரா, துறவறம் பூணும் முடிவை எடுப்பாரா என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், நிச்சயமாக அவர் தன் இறுதிக் காலத்தை மனநிம்மதியோடு கழிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார் என்பதை வெளியாகும் தகவல்களில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

அவர் இறுதிப் போரில் இடம்பெற்ற மீறல்களுக்கும் அட்டூழியங்களுக்கும் அநீதிகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர். அவற்றைத் தட்டிக் கழித்து, நீதியில் இருந்து, சட்டத்தில் இருந்து தப்பிக்க முனைந்தாலும், இயற்கையின் நியதியில் இருந்து தப்பிக்கொள்ள முடியாது.

அவரால் நிம்மதியாக இருக்க முடியாமல் போனதால்தான் பௌத்த சித்தாந்தத்தின் பக்கம் அவரது மனம் திரும்பியிருக்கிறது. தியானத்தின் மூலம் அதனைச் சமப்படுத்த முனைகிறார். இது அவர் மாற்றங்களை உள்வாங்கத் தயாராகிறார் என்பதை அர்த்தப்படுத்தவில்லை.

அவர் இன்னமும் தன் பழைய நிலையில் இருந்து மாறவில்லை என்பதற்கு ஓர் உதாரணம் இருக்கிறது. போரில் வெற்றி பெற்ற பின்னர், யாழ்ப்பாணத்தில் ஜேவிபி செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அவர்கள் அப்போது ஆட்சியில் இருந்த மஹிந்த அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள். அவர்களின் கதி என்னவென்று யாருக்கும் தெரியாது.

இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தில்தான் அந்த சம்பவம் நடந்தது. அந்த இரண்டு பேருக்கு என்ன நடந்தது என தெரியப் படுத்துமாறு கோரி, ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை மன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்குமாறு தொடர்ந்து கேட்டு வருகிறது. ஆனால் அவர் அதனைச் செவி மடுக்கவே இல்லை. யாழ்ப்பாணம் வருவதற்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறி நழுவி வருகிறார்.

தமக்கு யாழ்ப்பாணம் செல்வதில் இருந்து விலக்களித்து உத்தரவிட வேண்டும் என, உயர்நீதிமன்றத்தையும் நாடியிருந்தார். ஆனால் உயர்நீதிமன்றம், அவரை யாழ்ப்பாண நீதிமன்றத்திடம் அந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு கூறி விட்டது.

இதுவரையில் கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அங்கு முன்னிலையாவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி அவர் தப்பிக்க முனைகிறார். அவர் இவ்வாறு இழுத்தடிப்பதன் நோக்கம், பாதுகாப்பு அச்சுறுத்தல் அல்ல.

துறவறத்திற்குத் தயாராக உள்ள ஒருவருக்கு உயிர் மீது பயம் இருக்காது, ஆசை இருக்காது. எனவே அவர் துறவறம் செல்வாரா என்பது சந்தேகம்தான்.

அதேவேளை அவர் துறவு வாழ்க்கைக்குத் தயாராகின்ற ஒருவராக இருந்தால், கடந்தகால குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற முனைந்திருக்க வேண்டும். அதற்கான அறிவும் தெளிவும் அவருக்கு உருவாகியிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஏறி விசாரணைக்கு முகம் கொடுக்க முடியாத ஒருவர், எந்த வகையிலும் துறவு வாழ்க்கைக்குத் தயாராக இருப்பதாக நம்ப முடியாது. அவர் மீண்டும் மக்களை ஏமாற்ற முனைகிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

முன்னர் இலங்கை இராணுவத்தில் இருந்த மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர, ஓய்வுபெற்ற பின்னர் துறவறம் பூண்டார்.

புத்தன்கல ஆனந்த தேரோ என்ற பெயரில், அம்பாறையில் புத்தன்கல ஆரண்ய சேனசான விகாரையில் விகாராதிபதியாகவும் பணியாற்றினார். இராணுவத்திலிருந்த போது, ஜேவிபி கிளர்ச்சி முறியடிப்பின் போது மோசமான மனித உரிமை மீறல் குற்றங்களை இழைத்தவர் அவர்.

தற்போது இனவாதம் பேசுகின்ற முன்னாள் அமைச்சரும், கடற்படை அதிகாரியுமான சரத் வீரசேகரவின் மூத்த சகோதரரே ஆனந்த வீரசேகர.

1986ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோட்டை முற்றுகையில் இருந்த காலகட்டத்தில், விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டுவுடன் பேச்சு நடத்திய பிரபலமான பிரிகேடியர்தான் ஆனந்த வீரசேகர. அவர் பிற்காலத்தில் ஆனையிறவு படைத்தளத்திலும் கட்டளை அதிகாரியாக இருந்தவர். இராணுவத்தில் இருந்து தமிழருக்கு எதிரான வன்முறைகளை நிகழ்த்தியவர். அவர், துறவறம் பூண்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அதேபோலத்தான், கோட்டாபய ராஜபக்ஷவும் துறவறத்தின் மூலம், நிம்மதியை அடையலாம் என எதிர்பார்க்கிறார் போலும். ஏனென்றால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மரணங்களுக்கும் அவலங்களுக்கும் காரணமானவர் அவர்.

அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் தப்பிக்கொள்ள வேண்டுமானால், தன் மனதைத் திறந்து கடந்த கால தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அது அவருக்கு நிம்மதியையும் அமைதியையும் மாத்திரம் கொடுக்காது, ஒட்டுமொத்த நாட்டுக்கும் அமைதியை மற்றும் நல்லிணக்கத்திற்கான வழியைக் காட்டுவதாகவும் இருக்கக் கூடும்.

# புதிய கனடிய..

01ஆம் பக்கத்தொடர்ச்சி


சுங்கவரி கனடாவால் விதிக்கப்படும். இந்த இறக்குமதி மீதான சுங்கவரி கனடிய முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ சீனாவின் மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு 100% சுங்கவரி விதிக்கும் முன்னர் சீனாவின் மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு கனடா விதிக்கப்பட்ட வரியுடன் ஒத்துள்ளது. இந்த இறக்குமதிக்காக அனுமதிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை கனடாவில் வருடாந்தம் விற்கப்படும் புதிய வாகனங்களின் எண்ணிக்கையில் 3% ஆகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் 3 வருடங்களில் புதிய சீன முதலீட்டை கனடாவில் ஊக்குவிப்பதுடன் கனடிய தொழிலாளர்களுக்கு புதிய மின்கலங்கள் உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலியில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.



China is the world's largest producer of EVs Thanks: BBC / Getty Images


அத்துடன் 5 வருடங்களில் இந்த வாகனங்களில் 50%ஆனவை $35,000 இற்குக் குறைவான இறக்குமதி விலையில் கனடிய நுகர்வோருக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடாவிற்கும், சீனாவிற்கும் இடையிலான நீண்டகால உறவின் அடித்தளமாக வேளாண் உணவு (Agri - Food) வர்த்தகம் இருந்து வந்தது. அத்துடன் சீனா கனடாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இருந்து வந்தது. இந்த உறவைப் புதுப்பிக்கவும் மேலும் வலுப்படுத்தவும் மார்க் காணியும், ஜி ஜின்பிங்உம் வர்த்தகத் தடைகளை நீக்குவதற்கும் கட்டணங்களைக் குறைப்பதற்கும் முன் நடவடிக்கையாக ஓர் ஆரம்ப ஒப்பந்தத்தைக் கொள்கையளவில் மேற்கொண்டனர்.



Thanks: Friends of Socialist China

சீனா 2026 மார்ச் 1ஆம் திகதியில் இருந்து கனடாவின் கனோலா விதை மீதான (Canola Seed) சீனாவின் இறக்குமதி சுங்கவரியை 15%ஆகக் குறைக்கும். இது தற்போது சீனா விதிக்கும் 85% இறக்குமதி சுங்கவரியில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு குறைவாகும். கனடிய உற்பத்தியாளர் $4 பில்லியன் பெறுமதியான கனோலா விதையை சீனாவிற்கு ஏற்றுமதி செய்கின்றனர்.



The Skyline View, Doha, Qatar Thanks By Zairon - Own work

சீனா 2026 மார்ச் 1ஆம் திகதியிலிருந்து கனடிய கனோலா உணவு, நண்டு, Lobsters, இறால் மற்றும் பட்டாணி (Peas) போன்றவற்றின் மீதான சீனாவின் இறக்குமதி சுங்கவரியை 2026 டிசம்பர் 31 ஆம் திகதிவரை முற்றாக நீக்கும்.



Mark Carney arrives for meeting with Chinese President Xi Jinping Thanks: Vincent Thian / POOL / AFP via Getty Images

கனடிய வணிகங்களுக்கு மேற்கூறிய இரண்டு முடிவுகளும் உடனடியாகவே $3 பில்லியன் பெறுமதியான ஏற்றுமதிக்கான கொள்வனவுகளைக் கிடைக்க வழி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் உடனடியாகவே 1.4 பில்லியன் மக்களைக் கொண்ட மிகப் பெரிய சீனச் சந்தை கனடிய வணிகங்களுக்குத் திறக்கப்படுகிறது.



Auto China 2024 show in Beijing (China's largest EV maker) Thanks: Ng Han Guan/The Associated Press

இவற்றுடன் இந்த உத்வேகத்தை மேம்படுத்தக் கனடா தனது பொருட்களின் சீனாவிற்கான ஏற்றுமதியை 2030ஆம் ஆண்டுக்குள் 50%ஆல் அதிகரிக்க வேண்டும் என ஓர் இலக்கையும் நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக மார்க் காணியும், ஜி ஜின்பிங்உம் சுத்தமான எரிசக்தி மற்றும் தொழில்நுட்பம், வேளாண் உணவு, மரப்பொருட்கள் மற்றும் பிற துறைகளில் இருவழி முதலீட்டை அதிகரிப்பது பற்றியும் தமது சந்திப்பில் ஆராய்ந்தனர். விவசாயம், காட்டு மரங்கள் மற்றும் கடல் உணவுப் பொருட்கள் என்பவற்றில் உலகளாவிய ஏற்றுமதியில் கனடாவின் இரண்டாவது பெரிய வாடிக்கையாளரான சீனா 2024ஆம் ஆண்டில் $13.4 பில்லியன் பெறுமதியான பொருட்களை கனடாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.



Thanks: Canadian Chamber of Commerce

கனடாவுடனான இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக இருக்கும் சீனா 2024ஆம் ஆண்டில் இருவழி வர்த்தகத்தில் மொத்தமாக $118.9 பில்லியனை பரிமாறியுள்ளது. அதாவது, சீனாவிற்கான கனடாவின் ஏற்றுமதி $30 பில்லியனாகவும், கனடாவின் இறக்குமதி $88.9 பில்லியனாகவும் இருந்தது.

கனடிய மற்றும் சீன அதிகாரிகளின் சந்திப்பில் ஆக்கபூர்வமான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை பாதுகாப்பு (Security) மற்றும் பொதுப் பாதுகாப்பு (Public Safety) துறைகளில் ஒத்துழைப்பைத் தொடருதல், போதைப் பொருள் கடத்தல், Cyber Crime மற்றும் பண மோசடி ஆகியவற்றை சிறப்பாக எதிர்ப்பதற்கு ஒத்துழைத்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



Thanks: BBC

கனடா மற்றும் சீனா இரண்டு நாடுகளிலும் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பான சமூகங்களை உருவாக்குவதற்கு இரண்டு நாடுகளினதும் சட்ட அமலாக்க முகவர் நிறுவனங்களும் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டிய தேவை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



Mark Carney at a press conference Thanks: Adek Berry/AFP via Getty Images

இரண்டு நாடுகளுக்கும் இடையே கலாசார உறவுகளை அதிகரிக்கவும், அருங்காட்சியகங்கள், டிஜிட்டல் உள்ளடக்க படைப்பாளர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஆதரிப்பது உட்பட்ட கலாசார பரிமாற்றங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. கனடாவில் நடைபெறும் FIFA உலக கிண்ணம் 26இற்கு சீனாவிலிருந்து வரும் பார்வையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பிரயாணங்களை எளிதாக Destination Canada சீன ஊடகவியலாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மார்க் காணி வரவேற்றார். சீனாவிற்கு பயணம் செய்யும் கனடியர்களுக்கு விசா பெறவேண்டிய தேவையை சீன அதிபர் நீக்க எடுத்துக் கொண்ட உறுதியை கனடியப் பிரதமர் வரவேற்றார்.

கனடாவும், சீனாவும் உலகளாவிய நிர்வாகத்தை மேம்படுத்த பலதரப்புவாதத்தின் (Multilateralism) வலுவான ஆதரவாளர்களாக இருப்பதை உறுதிப்படுத்திய இரு நாட்டுத் தலைவர்களும் நிதி மற்றும் பொருளாதார நிலைத் தன்மையை மேம்படுத்த நெருக்கமாக ஒத்துழைக்க உறுதிபூண்டனர்.

சீனாவின் 2026ஆம் ஆண்டு APEC தலைமைத்துவத்திற்கு ஆதரவைத் தெரிவித்த கனடியப் பிரதமர் சீனாவில் நடைபெறும் 2026ஆம் ஆண்டிற்கான APEC தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் 2029ஆம் ஆண்டில் நடைபெற உள்ள APEC மாநாட்டை கனடாவில் நடத்த கனடா எடுக்கும் முயற்சிகளுக்கு சீன அதிபர் அளித்துவரும் ஆதரவை வரவேற்று கனடியப்பிரதமர் நன்றி தெரிவித்தார்.




# சிதைக்கப்படும் இனத்தின் எதிர்காலம்

– முகிலன் –

தமிழ் அரசியல் பரப்பில் இன்று, பரபரப்பாகப் பேசப்படுவது, சமூக ஊடகங்களில் காரசாரமாக விவாதிக்கப்படுவது, தமிழரசுக்கட்சியின் உட்கட்சிப் பூசல்தான்.

தமிழரசுக் கட்சியும் உள்ளக பூசலும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைபோல ஆகிவிட்டன. கட்சிக்குள் பல குழுக்கள் உருவாகி, ஒன்றை ஒன்று வீழ்த்துகின்ற நிலையை எட்டியிருக்கிறது.

தமிழரசுக் கட்சிக்குத் தலைமைத்துவ தேர்தல் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்ட போதே, பலர் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்திருந்தனர். ஆனால், கட்சி ஜனநாயக ரீதியாக செயல்படுகிறது என்றும், ஏனைய கட்சிகளுக்கு முன்னுதாரணமாக இருக்கும் என்றும் கூறி தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் எடுத்த அந்தத் தீர்மானம், இப்போது கட்சியை மோசமான நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

உண்மையில் கட்சியில் நடந்த தேர்தலுக்கும் ஜனநாயகத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. வழக்கம்போல, தலைமையைத் தெரிவு செய்வதில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டமுடியாமல்தான், தேர்தலுக்குச் செல்ல முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னர், அதிகார மோதல் உச்சத்தை எட்டியதுடன், இப்போது வெளிப்படையாக மோதிக்கொள்ளும் நிலை வந்திருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுடன் ஒன்றுக்கு இரண்டு தடவை தேர்தலில் தோல்வியடைந்தவர் எம்.ஏ.சுமந்திரன். 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அதற்குமுன்னர், கட்சியின் தலைமைத்துவ தேர்தலிலும் அவர் சிறிதரனிடம் தோல்வியடைந்தார். இந்த இரண்டு தோல்விகளும் சுமந்திரனை மிகவும் பாதித்திருக்கிறது. அந்தப் பாதிப்பின் விளைவுகளையே கட்சி இன்று எதிர்கொண்டிருக்கிறது. எப்படியாவது சிறிதரனை கட்சியை விட்டு வெளியேற்றி, அரசியலை விட்டு அகற்றி, அந்த இடத்தை பிடித்துக்கொள்வதில் சுமந்திரன் குறியாக இருக்கிறார். அவரது அண்மைய ஒவ்வொரு நகர்வுகளும் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

அரசியலமைப்புப் பேரவையில் உறுப்பினராக இருக்கும் சிறிதரன் அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களிக்கிறார் என்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து, அவரை பேரவையில் இருந்து விலகுவதற்கு தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு அழுத்தம் கொடுத்தது.



ஆனால் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர் பதவி, தமிழரசுக் கட்சியினால் கொடுத்த பதவியல்ல, அதனை விட்டு விலகுமாறு கேட்கின்ற உரிமை தமிழரசுக் கட்சிக்குக் கிடையாது என திடமான முடிவை எடுத்திருக்கிறார் சிறிதரன்.

சிறிதரன் அந்தப் பதவியை விட்டு விலகியிருந்தால் குற்றமிழைத்ததை அவர் ஒப்புக்கொண்டதாக அமைந்து விடும். அதனால் அரசியலமைப்புப் பேரவையில் இருந்து விலக மறுக்கும் அவர், சுயாதீன குழு ஒன்றின் முன்பாக தன்னை விசாரணைக்கு உட்படுத்துமாறும் கேட்கிறார். ஆனால் சிறிதரனை அவமானப்படுத்தி அரசியலிலிருந்து அகற்றுவதிலேயே குறியாக இருக்கும் தமிழரசுக் கட்சியின் இன்றைய தலைமைத்துவம், அரசியல் குழுவின் ஊடாக அவரிடம் இருந்து நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை பறித்திருக்கிறது.

சிறிதரனிடம் பறிக்கப்பட்ட அந்தப் பதவி சாணக்கியனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் அல்லது, சத்தியலிங்கம் போன்றவர்களிடம் அது கொடுக்கப்பட்டிருந்தால் சர்ச்சைகள் அதிகம் எழுந்திருக்காது. ஆனால் சுமந்திரன் சாணக்கியனிடம் தன்னிச்சையாக நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியைக் கொடுத்திருக்கிறார். இதற்கு அரசியல் குழுவிலோ, நாடாளுமன்றக் குழுவிலோ அனுமதி பெறப்படவில்லை.

அதுபோதாதென்று சாணக்கியனுக்கு வாழ்த்துத் தெரிவித்து, வடக்கு கிழக்கில் பல இடங்களில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி என்ற பெயரில் பதாகைகள் தொங்கவிடப்பட்டன. இனிப்புகள் பரிமாறப்பட்டன. பட்டாசுகளும் வெடிக்கப்பட்டன. இது சாணக்கியனின் நியமனத்திற்கான கொண்டாட்டம் அல்ல, சிறிதரனை வீழ்த்தியதற்கான கொண்டாட்டம். இந்தச் சம்பவங்கள் கட்சி இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை துலாம்பரமாகக் காட்டியிருக்கிறது.

இப்படியொரு நிலை, ஒழுங்கீனம் தமிழரசுக் கட்சி தவிர வேறு எந்தக் கட்சியிலும் இருக்க வாய்ப்பில்லை.

தமிழரசுக் கட்சியின் இன்றைய தலைமை இவ்வாறான செயல்களின் ஊடாக மீண்டும் மீண்டும் தவறு செய்கிறது.

கட்சி இப்பொழுது இரண்டாக பிளவுபட்டுக் கொண்டிருக்கிறது, சிறிதரன் வெளியேறுவாரா இல்லையா என்று ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் விவாதங்கள் நடக்கின்றன. ஆனால், தான் ஒருபோதும் வெளியேறப் போவதில்லை என திடமாகக் கூறியிருக்கிறார் சிறிதரன்.

அவரது இந்த நிலைப்பாடு, சுமந்திரன் தரப்புக்கு நிச்சயம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். ஏனென்றால் அவரை எப்படியாவது கட்சியை விட்டு வெளியேற்றுவதுதான் அவர்களின் இலக்கு.

கடந்த காலங்களில் இப்படியான நெருக்கடிகளைக் கொடுத்து, அவர்களாகவே வெளியேறச் செய்யும் நிலையை ஏற்படுத்தியவர் சுமந்திரன்.

கூட்டமைப்பை விட்டு சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் வெளியேறியது, அருந்தவபாலன், சசிகலா ரவிராஜ், தவராஜா, சரவணபவன், சிற்றம்பலம், சாள்ஸ் நிர்மலநாதன் போன்றவர்கள் இவ்வாறு நெருக்கடி கொடுக்கப்பட்டே ஒதுங்கிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்போது சிறிதரனை வெளியேற்றும் இலக்கை நிறைவேற்றி விட்டால், கட்சிக்குள் அவரை எதிர்க்க யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால், சிறிதரனை ஓரம் கட்டுவது எந்தளவு விபரீதமானது என்பதைத் தெரிந்து கொண்டே சுமந்திரன் செய்கிறார் என்றால், அது நிச்சயமாக தனது சுயநலனுக்காகவோ அல்லது கட்சியின் நலனுக்காகவோ மாத்திரம் அல்ல.

தமிழரசுக் கட்சி மாத்திரமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்படுவதற்கும் அது இன்று இல்லாமல் போய் இருப்பதற்கும் முக்கியமானவர் சுமந்திரன்.

இரா. சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக இருந்த காலகட்டத்தில், அவரை ஆட்டுவித்தவர் சுமந்திரன். இவரது சொற்படியே சம்பந்தன் நடந்து கொண்டார். அதன் விளைவுகள் என்ன, அதனால் எத்தனை பேர் கூட்டமைப்பை விட்டு வெளியேறினர் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. பலர் தாமாக வெளியேறினர் பலர் வெளியேற்றப்பட்டனர்.

தமிழரசுக் கட்சிதான் இன்று தமிழர் தரப்பின் வலுவான சக்தியாக இருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளியே கொண்டு செல்வதற்கும் பேசுவதற்குமான பிரதிநிதியாக இருக்கும் கட்சி அது. அதனை வலுப்படுத்துவதற்குப் பதிலாக சிதைப்பதிலேயே தமிழரசுக் கட்சியின் இன்றைய தற்காலிக தலைமைகள் கவனம் செலுத்துகின்றன.

கட்சிக்கு விசுவாசமானவர்கள், கட்சிக்கு அவசியமானவர்கள் கட்சியைவிட்டு வெளியேற்றப்படுகின்றனர் அல்லது வெளியேறும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். இதனால் சுமந்திரனுக்கு என்ன இலாபம்? இது தனியே நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, முதலமைச்சர் பதவிக்கு குறிவைக்கும் சுயநலம் மாத்திரமல்ல. அதற்கு அவர் குறி வைப்பதுபோல தோன்றினாலும் இதன் உண்மை தாற்பரியம் அதைவிட பரந்துபட்டது.

தமிழரின் அரசியல் உரிமைப் போராட்டத்தை முற்று முழுதாக சிதைத்து ஒன்றுமில்லாமல் ஆக்கும் ஒரு திட்டம் இது. இதனை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பைத்தான் சுமந்திரன் செய்து கொண்டிருக்கிறார். இதன் ஊடாக அவருக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்பதை எதிர்காலம்தான் தெளிவாக எடுத்துரைக்கும்.

உலகம் இதுபோன்ற பல சூட்சுமமான நபர்களைச் சந்தித்திருக்கிறது. அவர்கள் எப்படி சாம்ராஜ்யங்களை சிதைத்தனர் என்ற வரலாறும் எம்முன் இருக்கிறது. இது தமிழரின் அரசியல் எதிர்காலத்திற்கு வந்துள்ள சோதனை.

தனிநபர்களின் வெற்றி தோல்விகளுக்கு அப்பால், தமிழினத்தின் எதிர்காலமே பிரதானம். அந்த விடயத்தில் தமிழர் பின்னடைவைச் சந்தித்துக்கொண்டு இருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

## பொன்மொழிகள்

1. வருவதும் போவதும் இரண்டு – இன்பம், துன்பம்.
2. வந்தால் போகாதது இரண்டு – புகழ், பழி.
3. போனால் வராதது இரண்டு – மானம், உயிர்.
4. தானாக வருவது இரண்டு – இளமை, மூப்பு.
5. நம்முடன் வருவது இரண்டு – பாவம், புண்ணியம்.
6. அடக்க முடியாதது இரண்டு – ஆசை, துக்கம்.
7. தவிர்க்க முடியாதது இரண்டு – பசி, தாகம்.
8. நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு – பந்தம், பாசம்
9. அழிவைத் தருவது இரண்டு – பொறாமை, கோபம்
10. எல்லோருக்கும் சமமானது இரண்டு – பிறப்பு, இறப்பு

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH

SALES REPRESENTATIVE

DIR: 647.786.3436

pushpakana33@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED

5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



# ஜெயலலிதாவிடம் வைகோ பணம் வாங்கினாரா?

## நேர்காணல் – கே.எஸ். ராதாகிருஷ்ணன் நேர்கண்டவர் – கண்ணன்

**வைகோவின் அரசியல் எழுச்சியும் வீழ்ச்சியும்**

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

கேள்வி: தமிழ்நாட்டில் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் முதலில் திமுக கூட்டணியில்தான் மதிமுக இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அதிமுக கூட்டணிக்கு மாறினார், வைகோ. 2016 தேர்தலிலும், திமுகவுடன் இருப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், திடீரெனத் திருமாவளவன், விஜயகாந்த் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு மக்கள் நலக் கூட்டணி அமைத்தார். 2016 தேர்தலில் அதிமுக வெற்றிபெறுவதற்கு இதுவே ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இந்த இரண்டு முடிவுகளிலும் கணிசமான தொகை பணம் கைமாறியதாகப் பேசப்பட்டது. உண்மையில் இந்தத் தேர்தல்களில் என்ன நடந்தது?

பதில்: தமிழ்நாட்டில் 2001-2006 அதிமுக ஆட்சி, ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தார். வைகோவை இரண்டு ஆண்டுகள் சிறையில் வைத்திருந்தார், ஜெயலலிதா. அப்போது கருணாநிதி சிறையில் சென்று வைகோவைப் பார்த்தார். எனவே, இருவருக்கும் இடையே நல்ல உறவு மீண்டும் உருவானது.

இதனை தொடர்ந்து மதிமுக-திமுக கூட்டணி உறுதியாகி இருந்தது. தேர்தல் நெருங்குவதுவரை கலைஞருடன்தான் வைகோ பயணித்துக் கொண்டிருந்தார். சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில்தான் இருப்போம் என்று உறுதியாகக் கலைஞரிடம் தெரிவித்திருந்தார். திருச்சி திமுக மாநாட்டில் அதைப்பற்றி வெளிப்படையாக அறிவிக்கப் போவதாகவும் தொகுதிகள் அறிவிக்கப்பட உள்ளன என்றும் சொல்லப்பட்டிருந்தது. அந்த மாநாட்டில் வைகோவுக்கும் கட் அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. மிகப்பெரிய வரவேற்புக் கொடுக்கத் தொண்டர்களும் தயாராக இருந்தனர்.



மாநாட்டுக்காக வைகோவும் கலைஞரும் சென்னையில் இருந்து திருச்சிக்கு செல்ல வேண்டியதுதான் பாக்கி. கலைஞரிடம் வைகோ, "நீங்கள் இன்று செல்லுங்கள். நான் நாளை ராக்போர்ட் எக்ஸ்பிரஸில் ரிக்கெற் போட்டுவிட்டேன். மாநாடு அன்று காலை திருச்சியில் வந்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று சொன்னார்.

ஆனால், ரிக்கெற் போட்டுவிட்டேன் என்று சொன்னவர், மாநாட்டுக்குச் செல்ல வேண்டிய அந்த நாளில் மாலை நேர ரயிலில் ஏற வேண்டியவர், அந்த ரயிலில் ஏறாமல், ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்திற்குச் சென்றார். அதிமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 35 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது.

ஒரே நாளில் கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்து 35 தொகுதிகளென முடிவு ஆகி விடுமா? அதுவும், கலைஞரைச் சந்தித்த பத்து மணி நேரத்துக்குள் 35 தொகுதிகள் பற்றிப் பேசி முடிக்க முடியுமா? ஒரு புதிய கூட்டணி பற்றி பேச வேண்டும் என்றால் அதற்கு இரண்டு மாதம், மூன்று மாதம் ஆகும். அப்படியானால், ஜெயலலிதாவுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டே, இங்கே கலைஞரிடம் "நாளை திருச்சி வருகிறேன்" என்று வைகோ தெரிந்தே பொய் சொல்லி இருக்கிறார். இது என்ன நியாயம்? அதிமுக உடன் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கூட்டணி பேசிவிட்டு திமுகவுக்கு ஏன் நம்பிக்கை கொடுத்தீர்கள்? இதில் என்ன நேர்மை இருக்கிறது? உங்களை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்திய ஜெயலலிதா தலைமையிலான கூட்டணிக்கே ஏன் சென்றீர்கள்? எவ்வளவு இளைஞர்கள், எத்தனை புத்திசாலிகள், அறிவுஜீவிகள் உங்களை நம்பி வந்தனர், வைகோ. இப்படியா நடந்துகொள்வது? அப்போது அதிமுக கூட்டணியில் திருமாவளவன் உள்ளிட்டவர்களும் இருந்தனர். அதில் திருமாவளவன் தொடர்பாக ஒரு கட்டத்தில் "பணம் கொடுத்தேன்", "பணம் கொடுக்கவில்லை" என்ற பிரச்சினை ஏற்பட்டது. "நான் கொடுத்தேன், இவர் கொடுக்கவில்லை" என்ற குற்றச்சாட்டுகள் வந்தன. கூட்டணி கட்சிகளுக்குப் பணம் கொடுக்கும் பொறுப்பை ஜெயலலிதா, வைகோவிடம் ஒப்படைத்திருந்தார் என்ற பேச்சும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பிறகு உங்களுக்குத் தெரியும். 2011 தேர்தலில், வைகோ தேர்தலைப் புறக்கணித்தார். உண்மையிலேயே புறக்கணித்தாரா, அல்லது வேறு யாருக்கோ சாதகமாக அமைய அந்த முடிவை எடுத்தாரா என்ற கேள்வியும் எழுந்தது.

கேள்வி: 2016 தேர்தலில் என்ன நடந்தது?

பதில்: வைகோவுடன் 2001ஆம் ஆண்டில் இருந்து எனக்குப் பேச்சு இல்லை. இந்நிலையில், 2011இல் என் மனைவி இறந்தபோது அவர் வந்து துக்கம் விசாரித்தார். அதன்மூலம் ஓர் உறவு மீண்டும் தொடங்கியது. இந்நிலையில், 2016 தேர்தல் நெருங்கியபோது, நான் கலைஞரிடம், "வைகோவையும் நம்முடன் சேர்த்துக்கொள்ளலாம். அவருக்கு இப்போது ஜெயலலிதா, அதிமுக மீது ஆர்வம் இல்லை" என்று சொன்னேன். அதற்குக் கலைஞர், "வேண்டாம்பா, அவன் இங்கே வருவான், அங்கே போவான், நம்ப முடியாது" என்று சொன்னார். "அவனுக்காக நீ ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறாய்? அவனால் நீ அழிந்திருக்கிறாய்" என்றும் கூறினார். ஆனால், பிறகு, "சரி விடு, நான் பேசுகிறேன்" என்று சம்மதித்தார்.

அன்று மாலை, கோபாலபுரம் இல்லத்தில் வரண்டாவில் அமர்ந்தபடி, வைகோவுக்கு தொலைபேசி செய்தேன். "தலைவர் உங்களுடன் பேச வேண்டும்" என்று சொன்னேன். அவர், "பேசலாம், பேசலாம். நான் விமான நிலையத்திற்கு சென்று



கொண்டிருக்கிறேன், போன் போட்டுக் கொடுங்கள்" என்றார். உடனே மேலே போய் கலைஞரிடம் போனைக் கொடுத்தேன்.

கலைஞரும் வைகோவும் பேசினார்கள். அந்த உரையாடல் முழுவதும் எனக்குக் கேட்கவில்லை. "ஒன்பது வருடங்களுக்குப் பிறகு உங்களைப் பார்க்கிறேன். ராதாவையும் ஸ்டாலினையும் தமிழரசையும் அனுப்புகிறேன். தமிழரசு பையன் அருள்நிதி திருமணம் வைத்திருக்கிறோம். அந்தத் திருமணத்திற்கு நீங்கள் வர வேண்டும்" என்று கலைஞர் சொன்னார். அதன்படி, நான் உடன் சென்று அழைப்பிதழ் கொடுத்தோம், திருமணத்திற்கும் வைகோ வந்தார். பின்னர் கலைஞரின் சகோதரி மரணம் ஏற்பட்ட போது, ஒரு மணி நேரம் கலைஞருடன் உட்கார்ந்து வைகோ ஆறுதல் கூறினார்.

இந்நிலையில் ஒரு நாள் காலை பத்து மணிக்கு, நான் அறிவாலயத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, வைகோவின் அலுவலகத்திலிருந்து தொலைபேசி வந்தது. "தலைவரிடம் சொல்லுங்கள், நான் உங்கள் கூட்டணியில் இல்லை. கம்யூனிஸ்ட்கள், திருமாவளவன் எல்லாம் சேர்ந்து வேறொரு மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறோம்" என்று சொன்னார். எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அந்தச் செய்தியைக் கலைஞரிடம் எப்படிச் சொல்லுவது என்று தெரியாமல், அறிவாலயத்துக்குச் செல்லாமல் திரும்பி விட்டேன். மனம் மிகவும் சங்கடமாக இருந்தது. ஐநாக்ஸ் திரையரங்கு சென்று ஏதோ ஒரு படம் பார்த்துவிட்டு, வீட்டிற்கு வந்து சாப்பிட்டு தூங்கிவிட்டேன். பிறகு கலைஞருக்கு விடயம் தெரிந்துவிட்டது. அவர் என்னை அழைத்து, "நான் தான் முதலிலேயே சொன்னேனே" என்று வருத்தப்பட்டார்.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



**நாமும் நமது இல்லமும் 695**

# தலைகீழான அடமானம் (Reverse Mortgage)



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

தலைகீழான அடமானம் (Reverse Mortgage) என்பது பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்ட கனடிய குடிமக்கள் தங்கள் ஆதனத்தை அடமானம் வைத்து நிதி நிறுவனத்திலிருந்து மாதாந்த வருமானம்பெறும் ஒரு திட்டமாகும்.

ஆதனத்தின் சொத்து மதிப்பை (Equity) வரி இல்லாத (Tax Free) பணமாக மாற்றிக் கொள்ள முடியும். ஆதனத்தின் உரிமம் (Deed or Ownership) ஆதனத்தின் உரியவரிடமே காணப்படும்.

சில சந்தர்ப்பத்தில் உரிமையாளர் காலமாகி விட்டால் அல்லது ஆதனத்தை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டால் அந்த ஆதனத்தை நிதி நிறுவனம் தானே விற்று ஆரம்பக்கடன், மற்றும் அதற்குரிய வட்டியுடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் இந்தத் திட்டம் 60 வயதிற்கு மேற்பட்டோருக்காக உருவாக்கப்பட்டது.

கடன் வழங்கும் அதிகபட்ச காலம் 20 ஆண்டுகள் ஆகும். (அதாவது கடன் பெறுபவருக்கு பணம் வழங்கப்படும் அதிகபட்ச காலம்)

இந்தக் கடன் தொகையை
* வீட்டு மேம்பாடு / புதுப்பித்தல்
* மருத்துவ அவசர தேவைகள் போன்ற பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த லாம். ஆனால், முதலீடு, வர்த்தகம் அல்லது வணிக நோக்கங்களுக்காக இப் பணம் பயன்படுத்த அனுமதி இல்லை.

வீட்டின் மதிப்பீடு (Appraisal) கடன் வழங்குர் தீர்மானிக்கும் கால இடைவெளி களில் மேற்கொள்ளப்படலாம். ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு அவசியம்.

அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் கடன் தொகையில் மாற்றம் செய்யப்படும் உரிமை யானது கடன் வழங்குநருக்கு உள்ளது.

கடன் வழங்குநரின் உரிமையானது அடமானம் வரையறுக்கப்பட்ட ஆதனத்திற்கு மட்டுமே (Limited Recourse) உட்பட்டது.

அனைத்து ரிவேர்ஸ் மோட்கேஜ் கடன்களிலும் "No Negative Equity / Non-Recourse Guarantee" கட்டாயம் உள்ளது.

அதாவது கடன் பெறுபவர் அல்லது அவரினால் நிர்ணயிக்கப்பட்டவர் வீட்டின் நிகர விற்பனை மதிப்பைவிட எந்த சூழலிலும் அதிகமான கடன் செலுத்த வேண்டிய நிலை ஏற்படாது (கடன் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தால்)



கடன் பெறுபவர் இறந்தபின்னர் அல்லது வீட்டை நிரந்தரமாக விட்டுச் சென்ற பின்னர் சேர்க்கப்பட்ட வட்டியுடன் கடன் தொகை வீட்டை விற்பதன் மூலம் அடைக்கப்படும்.

மாற்றாக கடன் பெறுபவர் அல்லது அவரினால் நிர்ணயிக்கப்பட்டவர் வீட்டை விற்காமல் முழு கடன் தொகை மற்றும் வட்டியை செலுத்தி அடமானத்தை விடுவிக்கலாம். கடன் பெறுபவர் அல்லது அல்லது அவரினால் நிர்ணயிக்கப்பட்டவர் கடன் காலத்தின்போது அல்லது அதன் பின்னரும் எந்த முன் கட்டண அபராதமும் இல்லாமல் (No Prepayment Penalty) கடனை முன்கூட்டியே செலுத்தலாம்.

தலைகீழான அடமானம் பற்றிப் பலர், தமது கேள்விகளை தொடர்ந்து கேட்டு வருவதனால், கேள்வி பதிலாக கீழே தரப்பட்டுள்ளது. இதனைத் தவிர உங்களுக்கு மேலும் பல கேள்விகள் எழுமாயின் உங்களின் அனுபவமும், நம்பிக்கையுமான முகவர்களைச் சந்தித்து தகுந்த பதிலைப் பெறுவது சிறப்பாகலாம்.

**கேள்வி: நிதி நிறுவனம் ஆதனத்தின் உரிமையாளராக மாறுமா?**

**பதில்:** இல்லை. ஆதனத்தின் உரிமை (Title Ownership) எப்போதும் ஆதனத்தின் உரிமையாளரிடமே இருக்கும். ஆதனத்தின் மீது நிதி நிறுவனம் முதல் அடமானம் (First Mortgage) மட்டுமே வைத்திருக்கும்.

**கேள்வி: வங்கி எப்போது வேண்டுமானாலும் ஆதனத்தை விற்க அல்லது கைப்பற்ற கட்டாயப்படுத்துமா? (Power of Sale)**

**பதில்:** Reverse Mortgage என்பது வாழ்நாள் முழுவதற்குமான (Lifetime Product) கடன் ஆகும். கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்,

* சொத்துவரி (Property Tax) மற்றும் காப்பீடு (Insurance) முறையாக செலுத்தப்பட்டிருந்தால்.
* ஆதனம் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டால்
* ஆதனத்தின் உரிமையாளர் அந்த ஆதனத்தில் வாழ்ந்து வந்தால்
* வீட்டின் மதிப்பு குறைந்தாலும் கூட நிதி நிறுவனம் கடனைத் திரும்பக் கேட்க முடியாது. இது வாழ்நாள் முழுவதற்கு மான கடன் ஆகும்.

**கேள்வி: தலைகீழான அடமானக் கடன் எடுத்தால் ஆதனத்தின் மதிப்பைவிட அதிக கடனாகி விடுமா?**

**பதில்:** வாடிக்கையாளர்கள் தங்கள் ஆதனத்தின் மதிப்பில் இருந்து அதிக பட்சம் 55%வரை அடமானக் கடன் மட்டுமே பெறமுடியும். கடன்விதிமுறைகள் பின்பற்றப்பட்டால், ஆதனத்தின் மதிப்பை விட அடமானக் கடன் தொகை அதிகமாக இருக்காது. வாடிக்கையாளர்களில் 99% பேர் கடன் முடிந்த பின்னரும் ஆதனத்தின் சொத்தில் மேலதிக பெறுமதி மதிப்பு (Equity) வைத்திருக்கின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**கேள்வி: வட்டி வீதம் அதிகம் என்பதால் தலைகீழான அடமானம் மிகவும் செலவானதா?**

**பதில்:** Home Equity Bankஇன் வட்டி வீதங்கள் மற்ற மாற்றுக் கடன்கள் (Second Mortgage) அல்லது Unsecured Loans விட சாதகமானதாக இருக்கலாம். பொதுவாகக் கூறினால், நாம் பெறும் அடமானக் கடனின் வட்டி வீதத்தைவிட அதிகமாகும். மேலும், Reverse Mortgageஇல் மாதாந்திர தவணை (Monthly Payment) செலுத்த வேண்டிய அவசியமே இல்லை.

கடன் தொகையை கடன் பெற்றவர்கள் காலமான பின்னர் அல்லது வீட்டில் வாழாத நிலை ஏற்பட்டால் மட்டுமே திரும்பச் செலுத்த வேண்டி ஏற்படும்.

**கேள்வி: தலைகீழான அடமானம் என்பது கடைசி வழி (Last Resort) தீர்வா?**

**பதில்:** ரிவேர்ஸ் மோட்கேஜ் என்பது ஆதனத்தின் மதிப்பில் பெறுமதியை (Equity) பணமாக மாற்றி, கடன்பெறுபவர் தங்கள் ஓய்வு வாழ்க்கையை தங்கள் விருப்பப்படி அனுபவிக்க உதவும் ஒரு நிதித் தீர்வு. உண்மையில் பல நிதி நிபுணர்கள் ரிவேர்ஸ் மோட்கேஜை பரிந்துரைக்கின்றனர். ஏனெனில், இதன் மூலம் கிடைக்கும் பணத்திற்கும் வருமான வரி விதிக்கப்படாதது (Tax- Free). கடன்களை அடைத்த பிறகு மீதமுள்ள பணத்தை வாடிக்கையாளர் விரும்பும் எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தலாம். உதாரணமாக, விடுமுறை ஆதனம் வாங்க அல்லது பேரக்குழந்தைகளின் கல்வி செலவுகளுக்கு உதவுவதற்காக...

**கேள்வி: ஏற்கனவே ஒரு மோட்கேஜ் இருந்தால், ஆதனத்தின் உரிமையாளர் ரிவேர்ஸ் மோட்கேஜ் பெற முடியுமா?**

**பதில்:** ஆம். ரிவேர்ஸ் மோர்ட்கேஜைப் பயன்படுத்தி தற்போதுள்ள கடன்களை ஒருங்கிணைக்கலாம் (Consolidate). மாதந்தோறும் செலுத்த வேண்டிய கடன் தவணைகளை நீக்கலாம் மற்றும் நிதிப் பாதுகாப்பை பெறலாம். ஏற்கனவே உள்ள கடன்கள் முதலில் அடைக்கப்பட வேண்டும். அதன்பிறகு மீதமுள்ள தொகையை வாடிக்கையாளர் தன் விருப்பப்படி பயன்படுத்தலாம்.

**கேள்வி: ஆதனம் மீதான பெறுமதி அடகு வைத்துப் பெறும் (Home Equity Line of Credit - HELOC) Reverse Mortgageஐ விட சிறப்பான தீர்வா?**

**பதில்:** எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் அனைத்து தேர்வுகளையும் ஆராய்வது அவசியம். HELOC என்பது குறுகிய கால கடன் தேவைகளுக்கு நல்லது. குறிப்பாக வட்டி மற்றும் கடனை விரைவில் திருப்பிச் செலுத்த முடியும் நபர்களுக்கு. ஆனால், ரிவேர்ஸ் மோட்கேஜ் என்பது நீண்டகால நிதித் தீர்வு. இதில் மாதந்தோறும் எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும், ஓய்வுகால சேமிப்புகளை நீண்ட காலம் பயன்படுத்த உதவுகிறது. எதற்கும் இரண்டையும் சீர்தூக்கிப் பார்ப்பது சிறந்தது.

**கேள்வி: ஆதனத்தின் உரிமையாளர் இறந்த பிறகு, உயிருடன் இருக்கும் வாழ்க்கைத்துணை (Spouse) கடனை செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவாரா?**

**பதில்:** உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணையின் பெயர் ஆதனத்தின் உரிமையில் (Title) இருந்தால், அவர்கள் கடனை உடனடியாக செலுத்தாமல், ஆதனத்தில் தொடர்ந்து வாழலாம். ஏனெனில், Reverse Mortgage பெறும் போது இருவரின் பெயரில் இந்தத் தலைகீழான அடமானக் கடன் பதியப்பட்டுள்ளது.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

2 Bedrooms Condo. for rent. Locker & underground parking. Hardwood floor. Luxury end unit with good CN Tower view. Close to TTC & Go Station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.857.9773**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 Spacious bedrooms with den newly renovated walkout bsmt for rent. 1 parking. Close to TTC, HWY 401, UTSC & all facilities. No smoking & No pets. Avail. immediately.
**416.624.6895 /416.721.7832**

## BASEMENT & ROOM FOR RENT
**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt apart. for rent. Sep. entrance & parking.
**MARKHAM & DENISON**
Rooms available for rent. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Room for rent in bsmt. Sep. entrance & Shared kitchen. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.0566**

## BASEMENT & ROOM FOR RENT
**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent.
**MIDLAND & STEELES**
Room for rent in upstairs.
தொடர்புகளுக்கு: **416.768.6927**

## BASEMENT FOR RENT
**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking & sep. laundry. Close to all super markets, library & school. Small family/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.4067**

## BASEMENT FOR RENT
**14TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to YRT Costco, Spiceland & all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.525.2316**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
Room for rent. All inclusive. Avail. immediately.
**647.294.6042/437.219.3329**

## ROOM FOR RENT
**NEILSON & SHEPPARD**
1 Sharing room in upstairs & Private room in bsmt for rent. 1 Min. walk to bus stop. 2 Min. walk to Malvern Mall & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.278.2440**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
3 Bedrooms & 2 washrooms legal bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 2 Parking. Infront of bus stop, Close to all facilities. Avail. March 01, 2026.
**416.939.0464 /416.732.0055**

## BASEMENT FOR RENT
**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking. Single person preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## ROOM FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. Sep. entrance, No parking. Ladies only. Utility included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.8269**

## ROOM FOR RENT
**9TH LINE & 14TH AVENUE**
Private rooms / Sharing rooms for rent. Close to TTC & all the facilities. Avail.immediately.
**416.918.9848/416.857.7603**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, internet & Sep. laundry. Close to all facilities. Students / couple preferred. Avail. immediately.
**647.856.9730/647.569.0376**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms for rent in Upstairs. Parking & furnitures available. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.992.7694/647.408.9264**

## ROOM FOR RENT
**EGLINTON & MIDLAND**
1 Private room - Rent $750 & 1 Room for rent in sharing basis rent $500 in upstairs for rent. Parking available. Close to Kennedy station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.567.5435**

## BASEMENT & ROOM FOR RENT
**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. 1 Room for rent in upstairs. 1 parking. No alcohol, no pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.726.6076**

## ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance & sep. laundry. Male only. Close to Centennial college & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.221.5886**

## ROOM FOR RENT
**NEILSON & FINCH**
Rooms for rent. Two washrooms & shared kitchen. Couple /Female preferred. Avail. immediately.
**Cantact - 647.608.2171**
Whatsapp preferred.

## ROOM FOR RENT
**NEILSON & TAPSCOTT**
1 Room for rent in a bsmt. Sep. entrance & Sep. laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.606.8994**

## ROOM FOR RENT
**MIDLAND & EGLINTON -** Sharing room rent -$490/Private room- $650.
**MARKHAM & STEELES -** Sharing room - $490/Private room - $650.
**BRIMLEY & ELLESMERE -** Sharing room - $490/Private room - $550.
**MIDLAND & STEELES -** Sharing room - $490
**NEILSON & FINCH -** Sharing room - $450/Private room - $650.
தொடர்புகளுக்கு: **647.762.0670**

## ROOM FOR RENT
**PORT UNION & SHEPPARD**
1 Bedroom for rent in a 2 Bedrooms bsmt. Sep. entrance & 1 Parking. Male only. Close to Close to TTC, Go Train, Nofrills, Metro, Bank & all facilities. 3 Min. to HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.871.7082**

## HOUSE FOR RENT
**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms & 1 full washroom bangalow house main floor for rent. Rooms also available. 5 min. walking distance to Bus, school, bank, mall, HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**437.602.2366**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking, laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.
**416.477.8746/647.848.8997**

## HOUSE FOR RENT
**BROCK & HWY 407**
**PICKERING** - 5 Bedrooms & 3.5 washrooms brand new house main floor for rent. Parking available. Close to bus stop, Go station & all facilities. No pets & no smoking. Avail. March 01, 2026.
தொடர்புகளுக்கு:**416.660.4874**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SEWELLS**
3 Bedrooms & 2.5 washrooms main floor for rent. Parking available. Close to TTC, Eraa super market, Centennial college, UofT & all facilities. Avail. April 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.671.7136**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
1 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
4 Bedrooms & 2.5 washrooms main floor for rent. 3 Parking. Close to TTC, Eraa supermarket, Centennial college, UofT & all facilities. Avail. April 01, 2026.
தொடர்புகளுக்கு:**416.984.6737**

## HOUSE FOR RENT
**NEILSON & TAPSCOTT**
4 Bedrooms & 1.5 washrooms town house for rent. 2 Parking. Close to TTC, Malvern Mall, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.562.5239**

## HOUSE FOR RENT
**STEELES & STAINES**
4 Bedrooms & 2.5 washrooms house for rent. 3 Parking. 1 Min. walk to TTC & all facilities. Family Preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.843.4331**

## CONDO. FOR LEASE
**MARKHAM & MAJOR MACKENZIE** - 2 Bedrooms & 2 washrooms Condo. for rent. 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.3206**

## HOUSE & ROOM FOR RENT
**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedrooms house & 2 Bedrooms house for rent. Rooms also available. Utility Included. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.312.1947**

## HOUSE FOR RENT
**MORNINGVIEW & OLD FINCH** - 4 Bedrooms & 2.5 wash rooms house for rent. 3 parking. Close to TTC, School, Day care & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.4200**

## வீட்டு பராமரிப்பு
வீட்டுவேலையுடன் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் : Pickering
தொடர்புகளுக்கு:**647.970.8392**

## HOUSE FOR RENT
**9TH LINE & 14TH AVENUE**
4 Bedrooms & 3 washrooms house for rent. Rent - $3,300. Close to TTC & all the facilities. Avail.immediately.
**416.918.9848/416.857.7603**

## HOUSE & BASEMENT FOR RENT
**NEILSON & SHEPPARD**
3 Bedrooms house & 3 Bedrooms bsmt for rent. 2 parking. Close to TTC, HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.3462**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH- SCABOROUGH**
**MAIN & QUEEN ST. - BRAMPTON**
Office rooms for rent. Suitable for professional offices & Meeting Space /Medical Clinic/ Educational Classes. Evening 5Pm-10Pm (Week days) & weekends class rooms for rent.
**416.918.9848/416.857.7603**

## வயோதிபர் பராமரிப்பு
**SCARBOROUGH**வில் குறுகியகால மற்றும் நீண்ட கால முதியோருக்கான பராமரிப்பு குறைந்த கட்டணத்துடன் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

## HOUSE FOR RENT
**WHITES RD & TAUNTON**
**1085 Foxtail Cres. Pickering**
4 Bedrooms house for rent. 4 Parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.786.5816**

## HOUSE FOR RENT
**STEELES & STAINES**
2 Bedrooms & 2 full washroom house for rent. 2 Parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.473.3364**

## V MOVE & DELIVERY
உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான
**Toronto - Montreal/ OTTAWA moving** தேவைகளுக்கு
அழையுங்கள்.
**416.277.4245**



## JOB VACANCY
**CUSTOMER SERVICE**
**Convenience Store - Part time(15-25 Hrs) SCARBOROUGH**
**Requirement-** Basic computer knowledge & Experience in customer service.
Pls. Contact: **416.828.5019**

## HOUSE FOR RENT
**MCCOWAN & BRIMORTON**
3 Bedrooms newly renovated house main floor for rent. 1.5 washroom & 2 Parking. Walking distance to TTC, STC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.846.7973**

## HOUSE FOR RENT
**WHITES & TAUNTON**
**(Pickering)** 4 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.
**416.300.1796/647.504.9712**

## JOB VACANCY
**STUDENTS RECRUITERS**
**LOCATION : SCARBOROUGH / BRAMPTON** (Full time / Part time)
**Requirement -** University degree (Canada) & 10 Years Institutional experience & Communication skills in English & Tamil.
**416.918.9848 /416.857.7603**

பலசாலியான மனிதனை கூட பலவீனமாக்கும் ஆயுதம் "அன்பு"

## FOR RENT - HOUSES, CONDOS & BASEMENTS
**SCARBOROUGH -PHARMACY & SHEPPARD -**2 Bed/2 Bath Condo.
**PICKERING - WHITE & TAUNTON -** 4 Bed /4 Bath house
**AJAX - LAKE RIDGE & ROSSLAND -** 2 Bed Basement
**WHITBY - LAKE RIDGE & DUNDAS -** 4 Bed /4 Bath Townhouse
**MORNINGSIDE & MCNICOLL -** 2 Bed Basement
**Please call or text - 647.269.0193**

## HOUSE & BASEMENT FOR RENT
**SCABOROUGH -** - 4 Bedrooms / 3 Bedrooms house & 2 Bedrooms basement.
**MARKHAM & STEELES** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
**PICKERING** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
**AJAX** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
தொடர்புகளுக்கு: **647.850.7831**

## வீட்டு பராமரிப்பு

**RICHMOND HILL** பகுதியில் உள்ள வீட்டில் முழுநேரமாகவோ பகுதிநேரமாகவோ வீட்டு வேலைகளைச் செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:**416.302.8960**

## வயோதிபர் பராமரிப்பு

**SCARBOROUGH** பகுதியில் நாகேஸ்வரி இல்லத்தில் உங்கள் அன்பு வயோதிபர்களுக்காக பாதுகாப்பான, அன்பான குறுகியகால, நீண்டகால பராமரிப்பு வசதிகள். 24 மணிநேர கண்காணிப்புடன் நம்பிக்கையான சேவை.

தொடர்புகளுக்கு:**437.784.9041**

## FINANCIAL CONSULTATION

1. வீட்டுக்கு வங்கிக்கடன்–3.5%
2. Credit Repair/கடன் திருத்தம்
3. Bankruptcy /பாங்க் கிறப்சி
4. Business Loan/வியாபாரக் கடன் - $400K
5. Stop -Power of Sale

**Contact: 647.514.0431**

## JOB VACANCY

**CLEANING WORK**

Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை.

நேரம்- 5:00Pm -12:00Am

தொடர்புகளுக்கு: **416.822.0563**

## PARTNERSHIP

**KITCHEN FACTORY**

நடைமுறையில் இயங்கிவரும் கம்பனியுடன் இணைந்து செயல்படுவதற்கான அரிய சந்தர்ப்பம்.

இடம்: **Scarborough**

**4+** வருட அனுபவம் தேவை (Kitchen cabinet Making)

**Contact: 647.514.0431**

## மணமகன் தேவை

விவாகரத்தான Accountantஆக தொழில் புரியும் 38வயதுடைய நிரந்தரக் குடியுரிமை பெற்ற இரண்டு பிள்ளைகளையுடைய கனடாவில் வாழும் பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:**416.722.2914**

## Rathees Renovation

647 806 2323

- Kitchen and bathroom
- House painting
- Popcorn ceiling renewal
- Continuation work

FREE Estimation

ரதீஸ் புதுப்பித்தல் சேவை 647 806 2323

- சமையலறை மற்றும் குளியலறை புதுப்பித்தல்
- வீட்டு வர்ணப் பூச்சு
- பாப்கார்ன் சீலிங் புதுப்பித்தல்
- தொடர்ச்சியான சேவைகள்

மதிப்பீடு இலவசம்

## MEDCONSULT CLINIC

WALK IN CLINIC & FAMILY PRACTICE

## DR U. SOMASUNDARAM

1200 MARKHAM ROAD, UNIT 115, SCARBOROUGH, ON M1H 3C3

TEL : 416-439-8085

We are accepting New Patient's

OPENING HOURS
MON-FRI 9 AM - 7 PM
SAT 10 AM - 2 PM

On Site: Medical Laboratory, X-Ray, Ultrasound, Pharmacy

## Watson Property Management

We Pro-Manage your Properties!

FREE

FOR CONSULTATION/ SUGGESTIONS!

**416 284 9999**

MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




## WATSON PROPERTY MANAGEMENT

### About Us

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:

- Foreign property owners
- Multi-property investors
- First-time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

- AJAX
- BRAMPTON
- BOWMANVILLE
- BEAVERTON
- COURTICE
- ETOBICOKE
- KESWICK
- KINGSTON
- MARKHAM
- VAUGHAN
- STOUFFVILLE
- KITCHENER
- MISSISSAUGA
- NORTH YORK
- OSHAWA
- PICKERING
- SCARBOROUGH
- TORONTO
- TRENTON
- WHITBY
- WATERLOO
- NIAGARA
- NEWCASTLE
- RICHMOND HILL

### Our Services

- **Effective Marketing** Maximize property exposure.
- **Affordable Maintenance** Trustable handymen with cost effective repairs.
- **Property Showings** Find the right tenants.
- **Market Updates** Stay informed on property value.
- **Tenant Screening** Secure reliable and responsible renters.
- **Lease Renewals & Rent increase** Maximize rental income.
- **Lease Preparation** Handle all paperwork.
- **Financial Reports** Year-end accounting for tax purposes.
- **Move-in Assistance** Stress-free key handovers.
- **Legal Notices & Paralegal Support** Professional paralegal guidance.
- **Rent & Utilities Collection** Timely payments guaranteed.
- **Move-out Management** Key collection and final walkthroughs.
- **Regular Inspections** Regular walkthroughs every 6 months.



### We're Expanding & Hiring!

As we **CONTINUE TO GROW** and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance **NETWORK.** If you're a skilled handyman **OR** know someone who is we'd love to hear from you! **WE'D** love to work together.

**REACH US @: 416 284 9999**

# அன்பைப் பரிமாறும் தினம்



குரு அரவிந்தன்

வெலன்ரைன் தினம் (valentine's day) என்பது உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் பலராலும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும். பொதுவாக அன்பைப் பரிமாறும் தினமாக இதை எடுத்துக் கொள்வதால், 'அன்பைப் பரிமாறும் நாள்' என்றும் குறிப்பிடுவர். இத்தினத்தில் வேறுபாடு காட்டாமல் யாரும் யாரிடமும் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்வதால், மனதால் பண்பட்ட யாரும் அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

அதேசமயம் காதலர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த அல்லது பரிமாறிக்கொள்ள இந்த நாள் உகந்ததாகவும் இருப்பதால், 'காதலர்கள் தினம்' என்றும் குறிப்பிடுவர். சில நாடுகளில் 9 நாட்கள் இதைக் கொண்டாடுவர். காதலைக் கொண்டாடாத நாடுகளே இல்லை என்பதால், தொடக்கத்தில் அன்பைப் பரிமாற காதலர்கள் இயற்கை தந்த மலர்களையும், அவர்களுக்குப் பிடித்தமான இனிப்பு போன்றவற்றையும் பரிமாறினர். அதன்பின் கையால் எழுதிய வாழ்த்து மடல்களையும், தொடர்ந்து அச்சு இயந்திரங்கள் வந்ததால் அச்சிட்ட வாழ்த்து மடல்களைப் பரிமாறும் வழக்கமும் அறிமுகமானது.

வெலன்ரைன் தினம் எப்படி அறிமுகமானது என்பதைப் பார்ப்போம். மூன்றாம் நூற்றாண்டில் ரோமானிய அரசனான இரண்டாம் கிளாடியஸ் பேரரசர் இரண்டு பேருக்குத் தண்டனை கொடுத்து அவர்களை பெப்ரவரி 14ஆம் திகதி தூக்கிலிட்டார். வெவ்வேறு ஆண்டுகளில் அவர்கள் தூக்கிலிடப்பட்டாலும் அவர்களைப் போன்ற தியாகிகளுக்கு வெலன்ரைன் என்று பெயரிட்டனர். பெப்ரவரி 14ஆம் திகதி அன்று நடந்ததால், அவர்கள் செய்த தியாகம் புனித காதலர் தினமாகப் 14ஆம் நூற்றாண்டில் இருந்து கொண்டாடப்படுகின்றது. இதைப்பற்றி, 'செயிண்ட் வெலன்ரைன் தினத்திற்கானது இது, ஒவ்வொரு பறவையும் தன்னுடைய இணையைத் தேடி வரும்போது' என்று ஜெப்ரி சாஸர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.




ஆங்கிலத்தில் 'லவ்' என்று சொன்னால் அது அன்பைக் குறிக்கும். யாரைப் பார்த்தும் 'லவ்யூ' சொல்ல முடியும், தவறாக எடுக்க மாட்டார்கள். ஆனால் தமிழில் அப்படி அல்ல, அன்பு என்ற சொல்லை இன்னும் விளக்கமாக, தெளிவாகப் பிரித்திருக்கின்றனர். அன்பு, பாசம், காதல், நேயம், பக்தி என்று அன்புக்குத் தனித்தனியாக விளக்கம் தந்திருக்கின்றனர்.

8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நாயன்மார்களின் பாடல்களில் இருந்து ஓரளவு இதைப் புரிந்துகொள்ள முடியும். அளவுகடந்த பக்தி எப்படித் தெய்வீகக் காதலாகிறது என்பதைப் பாருங்கள். காதலர்கள் கிளியை, அன்னத்தை, புறாவை எல்லாம் தூது விடுவர். 'சிறையாரும் மடக்கிளியே இங்கே வா, துறையாரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ..?' என்று திருஞானசம்பந்தர் பாடுகின்றார். 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே' என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

'மலர்ச்சோலைப் பசுங்கிளியே சொல்லுங் குருநாதர் மாலைதனை நீ வாங்கி வா' என்று காங்கேசந்துறை இறங்கணியவளை பெண்ணொருத்தி அழகன் முருகனுக்குத் தூது விடுவதாக 17ஆம் நூற்றாண்டில் வரதபண்டிதர் பாடுகின்றார்.

உலகெல்லாம் காதலர்கள் இருப்பதால், அன்பைப்பரிமாற வயதெல்லை இல்லை என்பதால் உலகெங்கும் இப்போது கொண்டாடப்படுகின்றது. சொல்லாத காதலைச் சொல்வதற்குச் சிறந்த நாள் மட்டுமல்ல, ஒருதலைக்காதல் உடைந்து போவதும் இந்த நாளில்தான். சில சமூக மக்களிடையே காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே, சிலருக்குக் கசப்பதும் உண்டு. மேலை நாட்டுப் பண்பாடுகளை எங்களிடம் திணிக்கின்றனர் என்று அரசியல் செய்பவர்களும் உண்டு. இதய வடிவலான உருவம், இரட்டைப்புறாக்கள், புறாக்கள் தூதுபோவது போன்ற ஓவியம், சிறகுகளுள்ள தேவதையின் உருவம், மன்மத அம்புகள் போன்றவற்றைக் காதலர் தின குறியீடுகளாகச் சிலர் பாவிப்பர். பொதுவாக சிகப்பு ரோஜா மலர்கள்தான் கொடுப்பார்கள். 19ஆம் நூற்றாண்டில் வாழ்த்து மடல்களை இங்கிலாந்தில் எஸ்தர் ஹாவிலண்ட் என்பவர்தான் கையால் வரைந்து விற்பனை செய்யத் தொடங்கினார். நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களுக்கு அடுத்ததாக அதிகம் விற்பனையாகும் மடல்கள் காதல்தின வாழ்த்து மடல்கள் தான். வடஅமெரிக்காவில் பெண்களைவிட ஆண்கள்தான் வெலன் ரைன் தினத்திற்காக அதிகம் செலவிடுவதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

விகடனில் வெளிவந்த எனது முதற்கதை 'காதல் என்பது' காதல் திருமணம் செய்த இருவரின் புரிந்துணர்வு பற்றிய கதை. ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையில் காதலர்தினக் கதை எழுதிவந்தேன். தொடர்ந்து 16 வருடங்கள் காதலர்தினக் கதை எழுத முடிந்ததால் அதுவே ஒரு சாதனையாகி விட்டது ஆனந்தவிகடன் ஆசிரியர் காதலர்தின மலரில் வெளியிட காதலர் தினக் கதை ஒன்று கேட்டிருந்தார். 'அவளுக்கு ஒரு கடிதம்' என்ற கதையை அனுப்பி வைத்தேன். அந்த மலரில் அதிக வாசகர்கள் வாசித்த, விமர்சித்த கதை அது என்று ஆசிரியர் பின்பு குறிப்பிட்டிருந்தார். இந்தியா, இலங்கை, லண்டன், ஜெர்மனி, கனடா ஆகிய ஐந்து நாடுகளிலும் அதே வருடம், அதே மாதம் எனது காதலர்தினக் கதைகள் வெளிவந்து சாதனை படைத்திருந்தது. வேறு எந்த மொழியிலும் இப்படியான 'காதலர் தின' சாதனை இதுவரை இடம் பெறவில்லை.

பிரான்ஸ் நாட்டில் காதலர் தினத்தை 'செயிண்ட் வெலன்ரைன்' என்றும், போத்துக்கல் நாட்டில் 'ஆண்கள்-பெண்கள் தினம்' என்றும், சுவீடன் நாட்டில் 'அனைத்து இதயங்களின் நாள்' என்றும், பின்லாந்தில் 'நண்பர்கள் தினம்' என்றும், துருக்கியில் 'இனிய இதயங்களின் தினம்' என்றும், கௌதமாலாவில் 'காதல்-நட்பு பாரட்டுத் தினம்' என்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் 'இதயங்களின் தினம்' என்றும் இப்படி ஒவ்வொரு நாட்டவர்களும், அன்பைப் பரிமாறுவதற்கு ஏதோ ஒரு பொருத்தமான பெயரைச் சூடியுள்ளனர். யப்பான் நாட்டில் பெண்கள்தான் இத்தினத்தில் ஆண்களுக்கு இனிப்புக் கொடுக்க வேண்டுமாம். யார் அதிக இனிப்பு சேகரிக்கிறார் என்பதில் இருந்து அவரது பிரபலம் வெளிப்படுமாம். இதோ யப்பானியக் கவிதையில் இருந்து சில வரிகள்.

என் காதலனே, ஆடை ஒருபுறம் மாறிட கனவு வரும்
உண்மையாக உன்னையே நேரில் கண்டது போல!
சேராவிடினும் நான் துன்புறமாட்டேன், இந்த தலையணையை
நான் என்று எண்ணிடுவாய் அணைத்து உறங்கிடுவாய்!

சங்க இலக்கியத்தை எடுத்துப் பார்த்தால், காதலர்கள் ஊடலும் கூடலும் பிரிதலும் நோதலும் இரங்கலுமாகத் தம்முள் கொள்ளும் காதலுணர்வுகள் சொல்லிப் புரிய வைக்க முடியாதவை. இப்போது ஆறாம் நிலத்திணையான கனடா பனிப்புலத்தின் 'உருகுதலும்' இந்த ஐந்துடன் சேர்ந்து கொள்கிறது. காதலர் தினத்தைத்தான் அன்று தமிழர் 'காமன் பண்டிகை' அல்லது 'இந்திரவிழா' என்று 28 நாட்கள் கொண்டாடினர். அந்த நாளில் தமிழர் கொடுத்த காதலர் தினப் பரிசு என்வென்று பாருங்கள், 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே..' என்று வார்த்தைகளால் காதலிக்குப் புகழாரம் சூட்டினர். அப்படிப் பெண்களை வர்ணிக்கும்போது, வேறு எந்த ஒரு பரிசும் அதற்கு நிகராகாது என்பதையும் ஆண்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

தோல்விகளைக்கண்டு மனம் தளராதீர்கள் வாழ்ந்து காட்டுங்கள். நீங்கள் நினைப்பது போல, 'வெற்றிகள் எல்லாம் வெற்றிகளுமில்லை, தோல்விகள் எல்லாம் தோல்விகளுமில்லை! காதல் வலிகளும் ஒரு நாள் கடந்து செல்லும்.'

'காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம், சிற்ப முதற் கலைகளுண்டாம்
ஆதலினாற் காதல் செய்வீர், உலகத்தீரே!'

என்று புதுமைக்கவி பாரதியும் பாடியிருக்கின்றான். ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே!






யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# அங்கம்மாள் – திரைவிமர்சனம்

டிசெம்பர் 2025ஆம் ஆண்டில் வெளியான இந்தத் தமிழ்ப் படம் பிரபல நடிகர்கள் இல்லாமல் வெளிவந்தது. கதாநாயகியாக கீதா கைலாசம் நடித்துள்ளார்.

இப்படம் 1990ஆம் ஆண்டளவில் நடைபெறுகிறது. சிறு கிராமம் ஒன்றில் அங்கம்மாள் தனது மூத்த மகன் சுடலை, மருமகள் சாரதா மற்றும் பேத்தியுடன் வாழ்ந்து வருகிறார். அங்கம்மாளுக்கும் தனது மூத்த மகனின் மனைவி சாரதாவிற்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டாலும், அங்கம்மாவிற்கும் பேத்திக்கும் நல்ல நட்பான உறவு இருக்கிறது.

இந்நிலையில் அங்கம்மாளின் இளைய மகன் பவளம் மருத்துவ படிப்பை நகரத்தில் முடித்துவிட்டு வீடு திரும்புகிறார். படிக்கும்போது அவர் செல்வந்தர் ஒருவரின் மகளை காதலித்துள்ளார். தனது குடும்பத்திடம் தனது காதலைச் சொல்லி திருமணத்தை ஏற்பாடு செய்ய விரும்புகிறார். ஆனால், கிராமத்தில் எளிய முறையில் வாழும் தனது தாயை, குறிப்பாக அவருடைய மேலாடை அணியாமல் இருக்கும் பழக்கத்தை, அவரது காதலியின் குடும்பம் ஏற்க மாட்டார்கள் என அவர் நம்புகிறார்.

நேராக தனது தாய் அங்கம்மாளிடம் கதைக்கத் தயங்கும் பவளம், தனது பெண் உறவினர் மூலம் அவரை மேலா



டையை அணிய வைக்க முயல்கிறார். தனது வாழ்க்கை முறையில் தவறு இல்லை என உணரும் அங்கம்மாள் இதை செய்வாரா? என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

அங்கம்மாள் தான் இப்படத்தின் சிறப்பு. மிகவும் உறுதியான பெண் கதாபாத்திரமாக அவர் அமைந்துள்ளார். பாட்டி என்ற முறையில் அவர் கிராமத்தவர்களுக்கு அறிவுரை கூறி வருகிறார். கணவர் இறந்த பின்பு, இரு பிள்ளைகளை வளர்த்து இளைய மகனை மருத்துவராக்கி விட்டார். அப்படி இருந்தாலும் மூத்த மருமகளுடன் சண்டை பிடித்துப் பொதுவாக முரட்டுத்தனமாக உள்ளார். இவ்வாறு அவரது உறுதி, நன்மை மற்றும் பிரச்சினை என இரு வகையிலும் காட்டியது நன்றாக இருந்தது.



ஆடை போன்ற சிறு விடயம் எவ்வாறு பெரிய பிரச்சனையாக மாறலாம் என இப்படம் காட்டுகிறது. தவறில்லாத பண்டைய நடைமுறை புதிய வழக்கத்தினால் பிழையாகக் காட்டப்படுவதை இப்படம் உணர்த்துகிறது.

பெண்களின் உடை கலாசார அடையாளம் என்பதை பவளத்தின் காதலி



‘அங்கம்மாளின் உடை நன்றாக இருக்கிறது’ எனக் கூறியும், பவளம் அதை ஏற்காதது போன்ற கதை அம்சங்கள் உணர்த்துகிறது. இக்கருத்துகள் உரைமூலம் இல்லாமல், சாதாரண கிராமத்து வாழ்வும் குடும்ப உறவுகளின் அடிப்படையில் படத்தில் காட்டியபடியினால் இயற்கையாக உள்ளது. காட்சிகளே கருத்துகளைக் காட்டுகின்றன.

எல்லோரும் பார்த்துள்ள கிராமத்துச் சூழல் பெண்ணுரிமை, குடும்பச் சண்டையை வித்தியாசமாகக் காட்டும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

## ஜெயலலிதாவிடம்...

7 ஆம் பக்கத்தொடர்ச்சி

2011 தேர்தலை அவர் புறக்கணித்தது போல, 2016இல் மக்கள் நலக் கூட்டணியை உருவாக்கியதும் பல சந்தேகங்களை எழுப்பியது. மக்கள் நலக் கூட்டணி என்ற பெயர் முதலில் இல்லை. “நான் இனிமேல் உங்க கூட்டணியில் இல்லை” என்று என்னிடம் சொல்லிவிட்டுப் போன பிறகுதான் மக்கள் நலக் கூட்டணி என்ற பெயர் வந்தது. பிறகுதான் விஜயகாந்தை சேர்த்துக்கொண்டனர். வெற்றி பெற முடியாது என்று தெரிந்தே ஏன் அந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டது? தோல்வி உறுதி என்று தெரிந்தும், ஏன் தேர்தலில் நின்றீர்கள்? அதற்குப் பின்னால் பல விடயங்கள் இருக்கின்றன. அதைக் கேள்வி கேட்க வேண்டும். அந்த நேரத்திலும் பணம் வைகோ மூலமாகவே பட்டுவாடா செய்யப்பட்டது எனப் பேசப்பட்டது. பின்னர், விஜயகாந்த்கூட வருத்தப்பட்டதாகத் தகவல்கள் உண்டு. “மக்கள் நலக் கூட்டணிக்குப் போகாமல் திமுகவுடன் போயிருந்தால் நல்லா இருந்திருக்கும். வைகோவை நம்பி நாங்க நாசமாகிட்டோம்” என்று அவருடைய மனைவியே சொன்னார். சுதீஷ் கூடச் சொன்னார். 1998இற்கு முந்தைய வைகோவுக்கும் பிறகான வைகோவுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. 1998இற்குப் பிறகு இப்படித்தான், ஒவ்வொரு தேர்தலிலும் திடீரென்று முடிவு எடுப்பது, ஒரு கூட்டணியிலிருந்து இன்னொரு கூட்டணிக்குப் போவது என்பதாகவே வைகோவின் அரசியல் பயணம் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? லாபங்கள், ஆதாயங்கள், சொத்துகள் பற்றி பலரும் பலவிதமாகப் பேசுகின்றனர்.

இப்போது ஸ்டாலினும் சட்டமன்றத் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வைகோவுக்கு பணம் கொடுத்ததாகப் பேசப்படுகிறது. இன்று தேர்தலும் அரசியலும் வியாபாரம் என்று ஆகி விட்டது. அதுவும் தமிழ்நாட்டில் மிக மோசமான சீரழிவு. இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் ஓட்டுக்குப் பணம் கொடுக்கப்



படுகிறது. கேரளாவுக்கு போனால் கிடையாது. ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு, பவன் கல்யாண் யாரும் ஓட்டுக்குப் பணம் கொடுக்கவில்லை. கர்நாடகத்தில் ஓரளவு இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டில் மட்டுமே இது வெளிப்படையாக நடக்கிறது.

கூட்டணிக் கட்சிகளுக்குப் பணம் கொடுக்காமல், கம்யூனிஸ்ட்களுக்கு காசோலை கொடுப்பார்களா? ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் சேகரித்துத்தான் இயங்கினர். இன்று அவர்கள் காசோலை வாங்குகின்றனர். அது வெளிப்படையாக வந்துவிட்டது. மேற்கு வங்காளம், கேரளா, பீகார், அங்கெல்லாம் கம்யூனிஸ்ட்கள் வெற்றி பெறுகின்றனர். பீகாரில் சிபிஐ வெற்றி பெற்றது. தேஜஸ்வி யாதவ் பணம் கொடுத்தாரா? இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் கூட்டணி என்றால் பேரம், பணம், ஓட்டுக்குக் காசு.

அடுத்த இதழில் முடியும்

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

### தமிழானது எப்படியெல்லாம் மாறியிருக்கிறது சமஸ்கிருதத்துக்கு!

பூவை புஷ்பமாக்கி
அழகை சுந்தராக்கி
முடியை கேசமாக்கி
தீயை அக்னியாக்கி
காற்றை வாயுவாக்கி
பிணத்தை சவமாக்கி
கெட்டதை பாவமாக்கி
முகத்தை வதனமாக்கி
அறிவைப் புத்தியாக்கி
அவையை சபையாக்கி
ஆசானைக் குருவாக்கி
இசையை சங்கீதமாக்கி
குண்டத்தை யாகமாக்கி
பெரியதை மஹாவாக்கி
மக்களை ஜனங்களாக்கி
நிலத்தை பூலோகமாக்கி
அமிழ்தை அமிர்தமாக்கி
அருள்மிகுவை ஸ்ரீ ஆக்கி
ஆடையை வஸ்திரமாக்கி
உணர்வற்றதை சடமாக்கி
ஓவியத்தை சித்திரமாக்கி
கலையை சாஸ்திரமாக்கி
விண்ணை ஆகாயமாக்கி
குளியலை ஸ்நானமாக்கி
தொழுதலை பூஜையாக்கி
தண்ணீரைத் தீர்த்தமாக்கி
மாணவனை சிஷ்யனாக்கி
வேண்டுதலை ஜெபமாக்கி
முறைகளை ஆச்சாரமாக்கி
ஒன்பதாம் நாளை நவமியாக்கி
பத்தாம் நாளை தசமியாக்கி
திருவிழாவை உற்சவமாக்கி
பருவமடைதலை ருதுவாக்கி
உறக்கத்தை நித்திரையாக்கி
திருமணத்தை விவாகமாக்கி
பயணத்தை யாத்திரையாக்கி
செருப்பை பாதரட்ஷையாக்கி
படையலை நைவத்தியமாக்கி
பள்ளிகளை வித்யாலயமாக்கி
பிள்ளைப்பேறை பிரசவமாக்கி
வணக்கத்தை நமஸ்காரமாக்கி
அன்பளிப்பை தட்சணையாக்கி
அறிவியலை விஞ்ஞானமாக்கி
படிப்பித்தலை அப்பியாசமாக்கி
கருவறையை கர்ப்பகிரகமாக்கி
வேளாண்மையை விவசாயமாக்கி
குடமுழுக்கை கும்பாபிஷேகமாக்கி

எப்படி எப்படி அழகு தமிழ்ச் சொற்கள் அழிந்துள்ளன. தமிழ் மொழியைப் பேணுவோம்.

- கண்ணன் -



கண் பார்த்துப் பேசு. முகம் பார்த்துச் சிரி.
மனம் பார்த்து அன்பை செலுத்து.
குணம் பார்த்து நடந்துகொள்.
வாழ்க்கை இனிக்கும்.
இனிய காதலர் தின நல்வாழ்த்துகள்

# நேசம்



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

'இதை வைத்துக் கொள்ளுங்கள்', விரலிலிருந்த முத்திரை மோதிரத்தை மிக இலாவகமாகக் கழற்றி அந்த அரசர் தன் அருகே நின்ற விறகு வெட்டியிடம் நெகிழ்ச்சியோடு கொடுக்க அவரோ வேண்டாமென்று விடாப் பிடியாக மறுத்துக் கொண்டிருந்தார். அவர் முகம் மகிழ்ச்சி யால் மிளிர்ந்து கொண்டிருந்தது. அந்த விறகு வெட்டிக்கு மட்டுமல்ல உங்களுக்குமே இதுபோல் மகிழ்வான நிகழ்வுகள் அமையலாம். உங்களால் பிறர் மனதில் முத்திரை பதிக்க முடிந்தால்; அன்றும் எல்லா வார இறுதி நாட்கள் போல்தான் அரசரும் இளவரசரும் வேட்டைக்குச் சென்றனர். ஆனால் அன்று தங்களுக்கு போக்கு காட்டிய மானை துரத்திக் கொண்டே வந்தோர் வழி தவறி அடர்ந்த காட்டுக்குள் மாட்டிக் கொண்டனர்.

களைப்பும் சலிப்பும் தவிப்புமாக எங்காவது குடிக்க தண்ணீர் கிடைக்காதா, தன் நாட்டிற்கு திரும்பி செல்ல வழி தென்படாதா என சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நடந்தவர்கள் கண்களில் ஒரு விறகு வெட்டி தென்படுகிறார்.

அவர்களை யார் என்றே அந்த விறகு வெட்டி அறியாவிட்டாலும், அலைந்து, களைத்து, முகம் வாடி, உடல் சோர்ந்து இருந்த அவர்கள் பிரச்சினையை அறிந்த அவர் அருகிலிருக்கும் தன் சிறு குடிலுக்கு அழைத்துச் சென்று, தன்னிட மிருந்த உணவையும் தண்ணீரையும் அன்போடும் அனுசரணையோடும் கொடுத்து, அவர்களை அங்கே இளைப்பாறச் செய்கிறார். எளிய உணவே ஆனாலும், தான் இதுவரை அரண்மனையில் அருந்திய எந்த ஒரு அறுசுவை உணவும் இதற்கு ஈடாகாது என எண்ணும் மன்னரின் வயிறோடு மனமும் நிறைகிறது.

கொடுப்பதற்கு தன்னிடம் அப்போது வேறு எதுவும் இல்லாத மன்னர் நெகிழ்ச்சியில் தன் முத்திரை மோதிரத்தையே கழற்றி கனிவோடு விறகு வெட்டியிடம் கொடுக்கிறார்.

எந்த பலனும் எதிர்பாராமல் அவர்கள் யார் என்றே அறியாமல், தகுந்த நேரத்தில் அவர்களுக்கு ஆவன செய்த அந்த விறகு வெட்டியோ மோதிரத்தை வாங்க மறுத்ததோடு அவர்களை சுலபமான வழியில் நகரின் வாயிலுக்கே சென்று வழியனுப்பி விட்டு அவர்கள் அடைந்த மனநிறைவில், தன்னிறைவு பெற்றவராக, மகிழ்ச்சியோடு தன் வாழ்விடம் திரும்புகிறார்.

நகருக்குள் வந்த மன்னரை அடையாளம் கண்டு கொண்ட அந்த வழியே வந்த செல்வந்தர் ஒருவர் அவரை உடனே தன் அலங்கார மாளிகைக்கு அழைத்துச் சென்று உயர்ந்தவகை உணவுகளும் பழரசமும் அருந்தச் செய்து, அரசரை விழுந்து விழுந்து உபசரித்து அரசருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து, அவர் புறப்பட ஆயத்தமானதும் தன் வாகனங் களை தயார் செய்து பணியாட்களுடன் அவர் நாட்டுக்கு அனுப்பி வைக்கிறார். அரசர் அவருக்கு தன் சிறு புன்னகையால் ஓர் ஆமோதிப்பை வழங்கி விட்டு கம்பீரமாக விடை பெற்றுச் செல்கிறார்.

இளவரசருக்கு ஒன்றும் புரியவில்லை. வெறும் கூழும் குடிக்கத் தண்ணீரும் ஓய்வெடுக்க தன் சிறு ஓலைக் குடிலில் இடமும் தந்த அந்த விறகு வெட்டியுடன் அத்தனை கனிவாகப் பேசி தன் முத்திரை மோதிரத்தையே கொடுக்க முனைந்த தன் தந்தை, விருந்தும் உபசாரமும் செய்யும் இந்த செல்வந்தரிடம் இத்தனை கம்பீர மாக நடந்து கொள்கிறார். அது மட்டு மன்றி இவருக்கு எதுவும் கொடுக்கக் கூட நினைக்கவில்லையே என்ற வியப்பு மேலிட மன்னரிடமே அதைப்பற்றி கேட்கிறார்.

அதற்கு அந்த அரசர் சொல்கிறார், 'இந்த செல்வந்தருக்கு நான் அரசர் என்பது தெரியும். நம்மை இப்படி உபசரிப்பதால் அவருக்கு பெரும் பலன்கள் கிடைக்கும் என்பதும் புரியும். அதே கணக்கில் அவருக்கானது கிடைத்தும்விடும். ஆனால் அந்த விறகு வெட்டிக்கு நாம் யாரென்பதே தெரியாது. இருந்தும் அவர் ஓர் இக்கட்டான நேரத்தில் தன்னிடமிருந்த வற்றை எந்தக் கணக்கும் பார்க்காமல் தந்து நம்மிடம் இவ்வளவு கனிவு காட்டி இருக்கிறார். அது விலை மதிக்க முடியாதது. அந்த அன்புக்கு நாம் எது கொடுத்தாலும் ஈடாகாது. அதனால் தான் என் முத்திரை மோதிரத்தையே நான் கொடுக்க முன் வந்தேன். தவிர, நான் அளித்த மோதிரத்தை அவர் வாங்க மாட்டார் என்று எனக்கு தெரியும். உண்மையான, பலன் எதிபார்க்காத அன்பை நீயும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் நான் அவருக்கு அதை கொடுக்க முனைந்தேன். நான் நினைத்தது போலவே அவர் அதை வாங்க மறுத்து விட்டார். நாளை அவர் இருக்குமிடத்திற்கு ஆள் அனுப்பி அவரை இங்கு வரவழைத்து பொன்னும் பொருளும் பரிசளிப்பேன். அது அவர் மகிழ்ச்சிக்கு அல்ல என் சந்தோஷத்திற்காக என்று கூறும் தன் தந்தையையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார் இளவரசர்.

இந்தக் கதை வாழ்வின் அர்த்தத்தை எவ்வளவு எளிதாக சொல்லி செல்கிறது. உண்மையில் வெற்றி பெருமிதத்தைத் தரலாம். நல்ல வேலை பெருமையைத் தரலாம். ஆனால் பிறருக்கு நேசக் கரம் நீட்டுவதே உன்னதமான மனநிறைவைத் தரும். சமூகத்தோடு நெருக்கமான



பிணைப்பை ஏற்படுத்தும். உண்மையில் நம்மை மேலும் மேலும் உதவி செய்யத் தூண்டுவதற்காக இயற்கை அப்படியே அமைத்துள்ளது. ஆனால் வாழ்வில் கற்ற சில தவறான பாடங்களால் பலரும் இயற்கையின் விதியை மீற முற்படுகின்ற னர். எந்த பிரதி பலனையும் எதிர்பாராமல் செய்வதை புத்திசாலித்தனம் இல்லை என்று நினைக்கின்றனர்.

இவருக்கு இதை செய்தால் எனக்கு என்ன கிடைக்கும் என்ற மனக் கணக்கைத் தொடர்ந்தே பெரும்பாலும் ஒருவர் மனம் பிறருக்கு நேசக் கரம் நீட்ட முன் வருகிறது, அது மட்டுமல்லாமல் யாராவது ஏதாவது அன்பாக செய்ய முன் வந்தால்கூட, எதை நம்மிடம் எதிர் பார்த்து இவர் இதை நமக்கு செய்கிறார் என்றே மனம் கணக்குப் போடுகிறது. இதுவே பல நேரம் சிலருக்கு உதவி செய்வதற்கும் சிலருடைய உதவியைப் பெறுவதற்கும், கனிவாக நடந்து கொள்வதற்கும் தடை யாக இருக்கிறது. அதுவே பலர் மனதை தனிமைப் படுத்தி வெறுமையாக்குகிறது.

ஏதேனும் உதவி கேட்டு வருபவரையும், அவன் உண்மை சொல்கிறானா அல்லது நம்மை ஏமாற்றுகின்றானா என்ற சந்தேகம் முளை விடத் தொடங்கி அது கொடுப்பதை தடுத்து விடுவதோடு கொடுத்தாலும் மனமகிழ்ச்சிக்குப் பதில் மனஉளைச்சலை ஏற்படுத்தி விடுகிறது.

வியாபாரத்தில் கூட ஏதோ ஒரு கணக்கைப் போட்டு பிறரை எளிதில் நம்பி விடும் மனம், உதவி செய்வதில் வியாபாரக் கணக்குப் பார்க்கிறது. இது கொடுத்தால் அது கிடைக்கும் என்று கணக்குப் போடுவதால், எதையும் எதிர்பாராமல் கொடுப்பதால் கிடைக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சி மனதிற்குக் கிடைக்காமல் போய் விடுகிறது.

மகிழ்ச்சி என்பது உள்ளுக்குள் நிறையும் ஓர் உணர்வு என்பதை மறந்து விட்டு அதையும் பொருட்களில் பார்த்தால் தான் திருப்தி வருகிறது. பொருட்களாக இருந் தால் தான், நான் இத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று பிறருக்கும் காட்ட முடியும் என்றே மனம் எண்ணுகிறது.

நான் அவனுக்கு செய்தேன். ஆனால் அவன் எனக்கு செய்யவில்லை என்ற தவிப்பு பெரும் மனஉளைச்சளை பலருக் கும் ஏற்படுத்துகிறது. 90 சதவீத மக்கள் மனநிறைவு இன்றி தவிப்பதற்குக் காரணம் படிப்போ, பதவியோ, வேலையோ, பொருளாதாரமோ அல்ல, அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் மனப்பான்மை இல்லாமல் தங்களை தாங்களே இறுக்கமாக்கிக் கொள்வதுதான் என்கின்றது வாழ்வியல் ஆய்வுகள்.

இவர் அரசரா ஆண்டியா என்று பார்க்காமல் ஒருவரின் தேவைக்கு நீங்கள் உதவி செய்தால், அந்த உதவியும் நீங்கள் யாரென்று பார்க்காமல் உங்கள் தேவைக்கு உங்களை வந்தடையும். ஏனென்றால் நீங்கள் யாரோ ஒருவருக்கு செய்யவில்லை. இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் உறுப்பினர் ஒருவருக்கு செய்கிறீர்கள்.

சிறு புன்னகையும், அன்புப் பார்வையும் கனிந்த வார்த்தைகளும், மனம் திறந்த பாராட்டும் கூட நீங்கள் ஒருவருக்கு செய்யும் உதவியாக அமையலாம்.

உண்மையில் நம்மை சுற்றி இருப்பவர் களை நம்பும்போது, அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கும்போது எதிர் பார்ப்பு இல்லாத நேசம் வைக்கும்போது ஒருவருடைய மனமும் உடலும், ஆரோக் கியமாகவும் மலர்ச்சியாகவும் இருக்கும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



கண்ணதாசனின் அனுபவ மொழிகள்
தேவைக்கு மேலே பொருளும், திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால் பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத்தான் தோன்றும்!